Registered as a news paper. பக்கங்கள்:- பன்னிரண்டு

விலை ரூபா 10.00

நமது


# ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2037 பங்குனி 05 ஹிஜ்ரி 1427 ஸபர் 18 (19.03.2006) ஞாயிற்றுக்கிழமை இதழ் 169




# புதிய தூதுவர், சொல்ஹெய்ம் விரைவில் இலங்கை வருவர்!




## ஒஸ்லோவில் இருவரும் நீண்ட ஆலோசனை

ஒஸ்லோ —

நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்முடன் இலங்கைப் பிரச்சினை தொடர்பாக ஆலோசனைகளை நடத்திவரும் இலங்கைக்கான புதிய விசேட தூதுவர் ஜோன் ஹன்சன் பௌயர் - விரைவில் சொல்ஹெய்முடன் இணைந்து இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

ஜெனிவாவில் அடுத்த சுற்றுப் பேச்சுவார்த்தை நடைபெறுவதற்கு முன்னர் இந்த விஜயம் இடம்பெறும் என்றும் - ஆனால், இன்னமும் இந்தப் பயணம் தொடர்பான திகதி முடிவெடுக்கப்படவில்லை என்றும் ஹன்சன் பௌயர் தெரிவித்தார்.

இலங்கை சமாதான முயற்சிக்கான விசேட தூதுவராக (12 ஆம் பக்கம் பார்க்க)



# நெல் அறுவடையில் ஈடுபட்டிருந்த ஆறு தொழிலாளர்கள் கடத்தல்!

## மட்டக்களப்பில் சம்பவம்

மட்டக்களப்பு —

மட்டக்களப்பு - அக்குறணை வயல் பிரதேசத்தில் நெல் அறுவடையில் ஈடுபட்டிருந்த 6 தொழிலாளர்களை இராணுவத்தினரும் அவர்களுடன் சென்ற துணை ஆயுதக் குழுவினரும் கடத்திச் சென்றுள்ளனர்.

கடந்த 12 ஆம் திகதி நடைபெற்ற இந்தக் கடத்தல் சம்பவத்தில் செல்லத்தம்பி கங்கேஸ்வரன் (வயது 14 - மினிமினித்தவெளி), சிவலிங்கம் வனேஸ்வரன் (வயது 17 - மினிமினித்தவெளி), செல்லத்துரை ரமேஸ்வரன் (வயது 21 - முள்ளிவெட்டுவான்), சின்னையா ராமேஸ்வரன் (வயது 18 - அக்குறணை), குமாரியன் இளையராசா (வயது 22 - அக்குறணை), செல்லத்தம்பி தங்கராசா (வயது 16 - அக்குறணை) ஆகியோரே கடத்தப்பட்டவர்கள் என்று தெரியவந்துள்ளது.

அக்குறணை வயற்பிரதேசத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நெல் அறுவடை செய்து கொண்டிருந்த ஆறு தொழிலாளர்களை வெலிக்கந்த - தீவுச்சேனைப் பகுதியிலிருந்து இராணுவத்துடன் வந்த கருணா குழுவினர் பலவந்தமாக கடத்திச்சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவத்தை மட்டக்களப்பு மாவட்ட அரசியல் துறையினர் வன்மையாகக் கண்டித்துள்ளனர். இது தொடர்பாக வெளியிடப்பட்ட அறிக்கையில் - (12 ஆம் பக்கம் பார்க்க)

# கைதடிப் பெண் ஜேர்மனியில் பலி!

பேர்ளின் —

கைதடியைச் சேர்ந்த பெண் ஜேர்மனியில் ரயிலில் மோதுண்டு உடல் சிதறிப் பலியானார். இந்தச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை ஜேர்மனியில் டுசில் டோம் நகரில் இடம்பெற்றது.

டுசில் டோம் ரயில் நிலையத்துக்கு அண்மையில் தண்டவாளத்தில் வீழ்ந்த இவர்மீது இவ்வழியே வந்த ரயில் மோதியதாகவும் -

(12 ஆம் பக்கம் பார்க்க)

**வாசகர்களே...**

விளையாட்டு அரங்கம் இம்முறை நான்கு வர்ணங்களில் வெளிவரவில்லை. தவிர்க்க முடியாத காரணங்களால் ஏற்பட்ட இந்த அசௌகரியத்தை வாசகர்கள் பொறுத்துக்கொள்வார்கள் என நம்புகிறோம்.

- பிரதம ஆசிரியர் -



# ஆயுதக்குழுவின் அட்டகாசம்;



வன்னி - மணலாறு படைத்தளங்களைப் பார்வையிட வவுனியா விமான நிலையத்தை சென்றடைந்த இராணுவத்தளபதியை வன்னி படைத்தளபதி மேஜர் ஜெனரல் உபாலி எதிரிசிங்க வரவேற்கிறார். (செய்தி - 3 ஆம் பக்கததில்)

# ஆயுதக்குழுவின் அட்டகாசம்; காத்தான்குடியில் ஹர்த்தால்!

மட்டக்களப்பு

இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் துணை ஆயுதக் குழுவினரது வன் முறையைக் கண்டித்து காத்தான்குடி யில் முஸ்லிம் மக்களால் நேற்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.



காத்தான்குடியில் முஸ்லிம்களின் 4 மோட்டார் சைக்கிள்களை துணை ஆயுதக் குழுவினர் கடத்திச் சென்றதுடன் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களிடையே மோதலை உருவாக்கும் வகையில் வன் முறைகளைத் தூண்டி வருவதாக அந்தப் பிரதேச மக்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

துணை இராணுவக் குழுவினரது இத்தகைய செயற்பாட்டுக்குக் கண்டனம் தெரிவித்து காத்தான்குடியில் நேற்று ஹாத்தால் நடத்தப்பட்டது.

மட்டக்களப்பு - கல்முனை வீதியில ரயர்கள் எரிக்கப்பட்டு போக்குவரத்துத் தடை ஏற்படுத்தப்பட்டிருந்தது. (12 ஆம் பக்கம் பார்க்க)

# வட-கிழக்கு உள்ளூராட்சித் தேர்தல் இறுதி முடிவு நாளை அறிவிப்பு!

கொழும்பு

உள்ளூராட்சி சபைக்கான தேர்தலை வடக்கு - கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் நடத்துவது குறித்த இறுதி முடிவை தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க நாளை உத்தியோகபூர்வமாக வெளியிடுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அன்றைய தினம் தேர்தல்கள் ஆணையாளர், தெரிவத்தாட்சி அதிகாரிகள் மற்றும் உதவித் தேர்தல் ஆணையாளர்களுடன் கலந்துரையாடிய பின்பே தமது முடிவை வெளியிடுவார் என தகவல்கள் தெரிவித்தன.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# உள்ளூராட்சி சபைத் தேர்தல் கூட்டமைப்பு பிரசாரம் தீவிரம்

யாழ்ப்பாணம்

யாழ். குடாநாட்டில் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான பிரசாரங்களைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீவிரப்படுத்தியுள்ளது.

இதற்கமைய உள்ளூராட்சி சபை வேட்பாளர்களுக்கும் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குமான சந்திப்புக்கள் நடைபெற்று வருகின்றன.

நேற்றுக்காலை 10 மணியளவில் நெடுந்தீவுப் பிரதேச வேட்பாளர்களுடனான சந்திப்பு நெடுந்தீவு பலநோக்கு கூட்டுறவுச்சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் (12 ஆம் பக்கம் பார்க்க)

APC ஆனந்தா பிறைவேற் கிளினிக்
எமது சேவைகள் 1.வீடுகளுக்குச் சென்று நோயாளிகளைப் பார்வையிடல் 2. பெண் நோயாளர்கள் பெண் வைத்தியரிடம் ஆலோசனை பெறும் வசதி (தினமும் மாலை)
(C/4385) 173, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021-222 8144
ஆலோசனை நேரம்:
(திங்கள் முதல் சனி) காலை 6.00 முதல் இரவு 9.00 வரை
ஞாயிறு காலை 6.00 முதல் காலை 10.00 வரை
மாலை 5.00 முதல் இரவு 9.00 வரை



## சிறு விளம்பரம்

### வீடு விற்பனைக்கு

சுழிபுரம் - பறாளாய் வீதியில் சகல வசதிகளுடன் வீடு உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு:- அருணாசலம் (சுழிபுரம்) 0773121300 - குணாளன் (கொழும்பு) 0788933152, 0776315341. (2217)

### காணி விற்பனைக்கு

குமரபுரம் பரந்தன் 1/4 ஏக்கர் திட்டத்தில் A 9 வீதிக்கு அண்மையில் கிணறு, 8 அறை ஹோல் கொண்ட அத்திவாரத்துடன் கூடிய காணி விற்பனைக்கு உண்டு. அத்துடன் மின்பிறப்பாக்கி, சோலர் (பாவனையிலுள்ளது) சாதனங்களும் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு:- க.நாகராசா, இல. 02 கிருஷ்ணபுரம், கிளிநொச்சி தொலைபேசி - 0712387361. (C/5150)

### காணி விற்பனைக்கு

செல்லர் வீதி நல்லூரில் 2 பரப்பு சற்சதுரக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு :- 0777271240. (C/5145)


DAIDO Mopet



48CC

Koyo ரேசர்கள்

DAIDO உதிரிப்பாகங்கள் YAMATO




60B,
E.mail: zme@slt.lk



மனோகரா யாழ்ப்பாணம்




புரட்சிக் கலைஞர் விஜயகாந்த் அஷிமா மற்றும் பலர் நடித்த

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு

காட்சி:10.30, 1.30, 4.30, 7.30 (பு.நேரம்) விசே காட்சி இரவு 10.00

நிறைஞ்சனாஸ் சங்கானை

அர்ஜின், கஜாலா, விவேக் நடித்த

மதராஸி

கா.நே. (பு.நே) 11.00, 2.45, 6.00

ராஜா யாழ்ப்பாணம்

ஸ்ரீகாந், மீராஜஸ்மின் நடித்த



மெர்க்குரிப்பூக்கள்

பு. நேரம் : 10.30,2.00, 6.00,9.00

நாதன்ஸ்

சுப்பர் ஸ்டார் ரஜனிகாந், ரோஜா, ராதாரவி நடித்த



உழைப்பாளி

காட்சி நேரம் : 10.00, 1.30, 4.30 (பு.நே)


## தமிழீழ மாவட்ட நீதிமன்று, கிளிநொச்சி

வழ.இல : 235/05

தன்மை : விவாகரத்து

வழக்காளி :

ஜெ.வராகினி
புளியம் பொக்கனைச் சந்தி,
பெரியகுளம்,
கண்டாவளை.

எதிராளி :

ப.ஜெகதீஸ்வரன்
பத்தானைக்கேணியடி,
தொல்புரம் கிழக்கு,
சுழிபுரம்.

### அறிவித்தல்

மேற்படி எதிராளிக்கு,

இத்துடன் இணைக்கப்பட்டுள்ள இடைக்காலத் தீர்வை தொடர்பில் ஏதாவது ஆட்சேபனை இருப்பின், இவ் இடைக்காலத் தீர்வை பிரசுரிக்கப்பட்டு 14 நாட்களுள் மன்றில் தோன்றி தெரிவிக்கவும், தவறும் பட்சத்தில் இவ் இடைக்காலத் தீர்வை முற்றான தீர்வையாக் கப்படும் என்பதனை இத்தால் அறியத் தரப்படுகின்றது.

"மன்றின் கட்டளைப்படி"

வரைபு சட்டவாளர்
திருமதி.கலா விமல்நிக்ஷன்
சட்டத்தரணி
இல.5, ஆனந்தபுரம், கிளிநொச்சி.

பதிவாளர்,
தமிழீழ மாவட்ட நீதிமன்று,
கிளிநொச்சி.

[C/5161]

## விண்ணப்பத் திகதி நீடிப்பு

கரவெட்டி

வடக்கு - கிழக்கு மாகாண கைத்தொழில் திணைக்களத்தால் கரவெட்டி பிரதேச செயலகத்துக்குட்பட்ட பிரதேசத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள மின்னிணைப்பு, குழாய் பொருத்துதல் பயிற்சிநெறிகளுக்கான விண்ணப்ப முடிவு எதிர்வரும் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பயிற்சி நெறிக்கு ஆண்டு 8 வரை கல்வி கற்றவர்கள் விண்ணப்பிக்கலாம். அத்துடன் பயிற்சியாளர்களுக்கு பயிற்சிக்காலத்தில் ஊக்குவிப்பு கொடுப்ப-னவு வழங்கப்படும்.

பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்களை பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாமென கரவெட்டி பிரதேச செயலர் தெரிவித்துள்ளார்.

## தமிழீழ மாவட்ட நீதிமன்று, கிளிநொச்சி

வழ.இல : 235/05

தன்மை : விவாகரத்து

வழக்காளி :

ஜெ.வராகினி
புளியம்பொக்கனைச் சந்தி,
பெரியகுளம்,
கண்டாவளை.

எதிராளி :

ப.ஜெகதீஸ்வரன்
பத்தானைக்கேணியடி,
தொல்புரம் கிழக்கு,
சுழிபுரம்.

### இடைக்காலத் தீர்வை

மேற்படி விவாகரத்து வழக்கானது வழக்காளியால் எதிராளிக்கெதிராக தாக்கல் செய்யப்பட்டு, எதிராளிக்கு உரிய முறையில் பதிவுத்தபால் மூலம் அழைப்புக் கட்டளை சேர்ப்பிக்கப்பட்டும், எதிராளி மன்றில் தோன்றி நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளாமையால், மன்று குறித்த வழக்கை ஒருமுக விளக்கத்திற்கு எடுத்துக்கொண்டதன் அடிப்படையில் சென்ற 24/01/2006 ஆம் நாளில் மாவட்ட மன்றின் நீதியாளர் செல்வி.சாதனா அவர்களால் பின்வருமாறு ஒருமுக விளக்கத் தீர்ப்பளிக்கப்பட்டது.

அதாவது வழக்காளிக்கும் எதிராளிக்குமிடையிலான திருமணப் பதிவை இரத்துச் செய்யுமாறும், வழக்காளிக்கும் எதிராளிக்கும் பிறந்த பிள்ளையான மனுவர்சனை பாதுகாத்து, பராமரிக்கும் உரிமை வழக்காளிக்கே வழங்குமாறும், வழக்காளிக்கும் எதிராளிக்கும் இடையிலான திருமணத்தின்போது வழங்கப்பட்ட வீட்டுறுதி எதிராளியிடம் உள்ளதால் அதனை எதிராளி வழங்குமாறும், வழக்காளிக்கு ஏற்பட்ட வழக்குச் செலவை எதிராளி செலுத்துமாறும் வழங்கப்பட்ட ஒருமுக விளக்கத் தீர்ப்பின் பிரகாரம் இடைக்காலத் தீர்வையாக பதியப்படுகிறது.

வரைபு சட்டவாளர்
திருமதி.கலா விமல்நிக்ஷன்
சட்டத்தரணி
இல.5, ஆனந்தபுரம், கிளிநொச்சி.

நீதியாளர்,
தமிழீழ மாவட்ட நீதிமன்று,
கிளிநொச்சி.

[C/5161]

# 41 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மண்ணில் 12.04.1953

விண்ணில் 10.02.2006



அமரர்
லோறன்ஸ் அலெக்ஸ்சாண்டர்

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட எங்கள் குடும்பத் தலைவரின் இழப்பை அறிந்து எங்களோடு தங்கள் துயரை நேரடியாகக் கலந்துகொண்டும், தொலைபேசி, தொலைநகல்,தந்தி, பத்திரிகை, அஞ்சலிப் பிரசுரங்கள், மலர் வளையங்கள் மூலமாகவும் பகிர்ந்து கொண்ட அனைவருக்கும் மற்றும் எமக்குப் பலவழிகளிலும் உதவிகள் புரிந்த, புரிகின்ற அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

மேலும் எதிர்வரும் 22.03.2006 புதன்கிழமை பகல் 11.15 மணிக்குமானிப்பாய் புனித அன்னம்மாள் ஆலயத்தில் நடைபெறவிருக்கும் நினைவஞ்சலி திருப்பலியிலும், அதனைத்தொடர்ந்து சகோதரன் வீட்டில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

இப்படிக்கு
பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், சகோதர சகோதரிகள், மைத்துனர், மைத்துனிகள், உற்றார், உறவினர்கள்.

உரிமையாளர்: NEWTON WINE SHOP, A.J.M TEX, ALAI ARASY } JAFFNA

யாவில் ஒழுங்கை, ஆனைக்கோட்டை

தொலைபேசி : 021 - 222 5352, 021 - 222 7665, 077 - 253216, 0777 - 747986

[C/5156]

# போர் நிறுத்த உடன்பாட்டின் மூலம் தமிழீழ அங்கீகாரம் வலுவடைகிறது

## என்கிறார் லால்காந்த

கொழும்பு —

யுத்த நிறுத்த ஒப்பந்தமானது தமிழீழத்துக்கான அங்கீகாரத்தை சர்வதேச ரீதியாக நாள்தோறும் அதிகரிக்கச் செய்து வருவதாகவும், ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் கே.டி.லால்காந்த தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் சில விதிகளை ரத்துச் செய்வதன் மூலமே சமாதான முயற்சிகளிலிருந்து நோர்வேயை வெளியேற்ற முடியும். அதற்கான பணிகளிலேயே தற்போது ஜே.வி.பி ஈடுபட்டுள்ளது. எனவே, சமாதான அனுசரணைப் பணியிலிருந்து நோர்வேயை வெளியேற்றுவது தொடர்பாக விரைவில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளோம்.

சமாதான செயற்பாடுகளின் அனுசரணைப் பணியிலிருந்து நோர்வேயை நீக்க வேண்டுமென ஜே.வி.பி அடிக்கடி வலியுறுத்தி வருகின்றது. ஆனால், இது தொடர்பாக அரசாங்கம் எந்தவிதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்வதாகத் தெரியவில்லை.

இது தொடர்பாகவும், ஜெனிவாவில் இடம் பெறவுள்ள இரண்டாம் சுற்றுப் பேச்சுவார்த்தைகள் குறித்தும் ஜனாதிபதியுடனான சந்திப்பில் கலந்துரையாடுவோம். எதிர்வரும் பேச்சுவார்த்தையின்போது கூட்டறிக்கை எதுவும் விடுக்கப்படக்கூடாதெனவும் வலியுறுத்தவுள்ளோம். கடந்த பேச்சுவார்த்தை முடிந்த பின்னர் வெளியிடப்பட்ட கூட்டறிக்கை நோர்வேயின் தேவைக்காகவே விடுக்கபட்டதென்பது நன்கு தெளிவாகியுள்ளது.

புதியதொரு போர் நிறுத்த உடன்படிக்கை அமுலுக்குக் கொண்டு வரப்படவேண்டும். அதற்காக தற்போது நடைமுறையிலுள்ள போர் நிறுத்த உடன்படிக்கையை திருத்தியமைக்க வேண்டும். முக்கியமாக போர் நிறுத்த உடன்படிக்கையிலுள்ள விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி என்ற விடயம் முற்றாக நீக்கப்படவேண்டும். இந்த விடயம் நீக்கப்பட்டால், போர் நிறுத்த உடன்படிக்கையே நடைமுறையில் அற்றதாகிவிடும். அதன்பின் நோர்வே தானாகவே சமாதான முயற்சிகளிலிருந்து வெளியேறி விடும்.

எந்த நேரமும் நாட்டைப் பாதுகாக்க இராணுவத்தைத் தயாராக வைத்திருக்க வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

# ஏப்ரல் முதல் வாரத்தில் அமைச்சரவை மாற்றம்

கொழும்பு —

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் பின்னர், ஏப்ரல் முதல் வாரத்தில் அமைச்சரவையை மாற்றியமைப்பது குறித்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தீர்மானித்துள்ளதாக ஜனாதிபதி செயலகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

கடந்த மூன்று மாத காலப்பகுதியில் அமைச்சர்கள் மற்றும், பிரதி அமைச்சர்களின் செயற்பாடுகள் தொடர்பாக கண்காணித்த பின்னரே ஜனாதிபதி அமைச்சரவையை மாற்றத் தீர்மானித்துள்ளார்.

இந்த அமைச்சரவை மாற்றத்தின்போது, அமைச்சரவை அந்தஸ்துள்ள, அமைச்சுப் பதவிகளில் மாற்றங்கள் நிகழலாமெனவும் அமைச்சரவை அந்தஸ்தற்ற பிரதி அமைச்சர் பதவி கள் சில ரத்தாகலாமெனவும் அவர் தெரிவித்தார்.

அரசாங்கத்தைப் பலப்படுத்துவதற்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இ.தொ.கா மற்றும் மலையக மக்கள் முன்னணியின் ஆதரவைப் பெற வேண்டுமென்பதற்காக அந்தக் கட்சிகளுக்கு வழங்குவதற்கென சில அமைச்சுப் பதவிகளை ஒதுக்கவும் ஜனாதிபதி தீர்மானித்துள்ளார். (தே)

# விருப்பு வாக்கிற்கு அடையாளமிடும் வாக்குச் சீட்டு செல்லுபடியற்றதாகும்

## தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

கொழும்பு —

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கட்சியொன்றின் சின்னத்திற்கு அடையாளமிடாமல் விருப்பு வாக்களுக்கு மாத்திரம் அடையாளமிடப்பட்டால் அந்த வாக்கு செல்லுபடியற்றதாகக் கருதப்படும் என்று தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 30ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வாக்களிக்கும் முறைகள் தொடர்பாக விளக்கமளிக்கும் போதே தேர்தல்கள் ஆணையாளர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வாக்குச் சீட்டின் மேற்பகுதி யில் கட்சிகளினதும், சுயேட்சைக் குழுக்களினதும் பெயர்களும், அவற்றின் சின்னங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன.

சின்னங்களுக்கு அருகில் உள்ள வெற்றுக்கூட்டில் ஏதாவது ஒரு சின்னத்துக்கு வாக்காளர் முதலில் அடையாளமிட வேண்டும். வாக்குச் சீட்டின் கீழ்ப்பகுதியில் வேட்பாளர்களுக்கு ஒதுக்கப்படவுள்ள விருப்பு இலக்கங்களும், அதன் அருகே இரண்டு வெற்றுக் கூடுகளும் காணப்படும். இதில் ஒரு வாக்காளர் மூன்று விருப்பு வாக்குகளை அளிக்க முடியும்.

மூன்று விருப்பு வாக்குகளையும் ஒரு வேட்பாளருக்கோ அல்லது இரண்டு விருப்பு வாக்குகளை ஒருவருக்கும் மற்றையதை இன்னொருவருக்கோ அல்லது மூன்று விருப்பு வாக்குகளையும் மூன்று வெவ்வேறு வேட்பாளர்களுக்கோ செலுத்த முடியும்.

முதலில் கட்சியின் அல்லது சுயேட்சைக்குழுவின் சின்னத்திற்கு நேராக புள்ளடி இடவேண்டும். அதன் பின்னர் விருப்பு வாக்குகளை அடையாளமிடுவதே பொருத்தமானது என்றும் தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

# நாடாளுமன்றில் நாளுக்கு நாள் அரசின் பலம் அதிகரிக்கிறதாம்

## நிமால் சிறிபால டி சில்வா



கொழும்பு —

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தலைமையிலான அரசாங்கத்துக்கு நாடாளுமன்றத்தில் நாளுக்கு நாள் பெரும்பான்மை அதிகரித்துக்கொண்டே வருகின்றது. இதனால் எதிர்வரும் உள்ளூராட்சிசபைத் தேர்தலின் பின்னர் 2009 ஆம் ஆண்டு வரை எந்தத் தேர்தல்களும் இடம்பெறாதென அமைச்சரவைப் பேச்சாளர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஆறு மாத காலத்துக்குள் சகல தேர்தல் முறையிலும் மாற்றங்களை கொண்டுவருவதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார். அவ்வாறு மேற்கொள்ளப்படும் மாற்றங்கள் தொடர்பான சட்ட மூலங்கள் உள்ளூராட்சிசபைந் தேர்தல் முடிவடைந்த பின்னரான ஆறுமாத காலத்துக்குள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# உள்ளூராட்சித் தேர்தலில் ஜே.வி.பி முதன்மைக் கட்சியாக விளங்கும்!

## ஜே.வி.பி தெரிவிப்பு

கொழும்பு —

உள்ளூத் தேர்தல்களில் ஜே.வி.பியே பெரும்பான்மை பலம் பொருந்திய முதன்மைக்கட்சியாக இருக்கும் என்பதில் எந்தவிதமான சந்தேகமும் கிடையாது என ஜே.வி.பி தெரிவித்துள்ளது. இது தொடர்பாக மேலும் தெரிவித்துள்ளதாவது -

இந்த நாட்டின் மக்கள் ஜே.வி.பி மீது அசைக்க முடியாத நம்பிக்கை வைத்துள்ளனர். உள்ளூராட்சிசபைத் தேர்தல்களில் ஆளும் தரப்புத்தான் வெற்றி பெறும் என்ற எண்ணமும் இதன் மூலம் தகர்க்கப்படும்.

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகள் தேசிய அரசியலில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தாது. இருப்பினும் எதிர்காலங்களில் அரசியல் செல்வாக்கு செலுத்துவதற்கு இந்தத் தேர்தலை அடிப்படையாகப் பயன்படுத்த முடியும் என்றும் லால்கந்த மேலும் தெரிவித்தார்.

# வவுனியா, மணலாறு படைத் தளங்களுக்கு இராணுவத் தளபதி பொன்சேகா விஜயம்

கொழும்பு —

இராணுவத்தளபதி லெப்.ஜெனரல் சரத் பொன்சேகா, வவுனியா மற்றும் மணலாறு இராணுவத் தலைமையகங்களுக்குச் சென்று பாதுகாப்பு நிலைமைகள் குறித்து இராணுவ உயர் அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.

நேற்று முன்தினம் இராணுவத் தளபதி வவுனியா இராணுவத் தலைமையகத்துக்குச் சென்றார். 211 ஆம் படைப்பிரிவின் தலைமையத்தில் அவருக்கு இராணுவத்தினர் வரவேற்பளித்தனர்.

வன்னி கட்டளைத் தளபதி மேஜர் ஜென்ரல் உபாலி எதிரிசிங்க தலைமையிலான முக்கிய இராணுவ அதிகாரிகளுடன் பாதுகாப்பு நிலைமைகள் குறித்து சரத்பொன்சேகா ஆலோசனை நடத் தினார்.

இதன் பின்னர் இராணுவத்தினர் மத்தியில் உரையாற்றிய அவர் - மக்களுக்கும், இராணுவத்துக்கும் உரிய கௌரவமான தீர்வை காண்பதற்காகவே, அரசாங்கம் சமாதானப் பேச்சில் ஈடுபட்டுள்ளது. அரசின் நோக்கத்தை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு இராணுவத்தினருக்குள்ளது எனத் தெரிவித்தார்.

இதன் பின்னர் மணலாறு சென்ற இராணுவத்தளபதி, அங்குள்ள நிலைமைகள் குறித்து இராணுவ உயர் அதிகாரிகளையும் சந்தித்துக் கலந்தரையாடினார்.



# தேசியப் பட்டியல் மூலம் எம்.பியாக நியமிக்க கோருகிறார் எஸ்.பி!

கொழும்பு —

தனது உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பாக ஐ.தே.கட்சி உறுதியான கொள்கைகளைப் பின்பற்றாதது குறித்து விமர்சனத்துடன் கூடிய கடிதமொன்றை கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பியுள்ள எஸ்.பி.திஸநாயக்க உடனடியாக தன்னை தேசியப்பட்டியல் மூலம் நாடாளுமன்ற உறுப்பினராக நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளார்.

தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இரத்துச் செய்து ரேணுகா ஹேரத்தை நுவரெலியா மாவட்டத்தின் ஐ.தே.க.கட்சி நாடாளுமன்ற உறுப்பினராக நியமிப்பதற்குத் தீர்மானித்ததற்கு எதிராக தேர்தல் ஆணையாளரும், நாடாளுமன்ற செயலாளர் நாயகமும் எடுத்த தீர்மானத்தை இரத்துச் செய்யுமாறு கோரி உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை, விசாரணைக்கு நீதிமன்றம் ஏற்றுக்கொண்டபின், எஸ்.பி.திஸநாயக்க இந்தக் கடிதத்தை ரணிலுக்கு அனுப்பியுள்ளார்.

இந்தக் கடிதத்தை அனுப்பியவுடன் அவர் இந்தியாவுக்குச் சென்றுள்ளது குறிப்பிடத்தக்கது. (தே)

# முஸ்லிம் ஊர்காவலரை மூதூரில் காணவில்லை

திருகோணமலை —

திருமலை - மூதூர் அலி ஒலுவப் பகுதியில் முஸ்லிம் ஊர்காவல் படையைச் சேர்ந்த ஒருவர் காணாமல் போயுள்ளார். நேற்று முன்தினம் இரவு முதல் காணா மல் போயுள்ள இவர் கடத்தப்பட்டிருக்கலாம் என படையினர் தெரிவித்தனர்.

வாழைச்சேனையைத் சேர்ந்த மொகமட் தாஸின் என்பவரே காணாமல் போனவராவார். இவர் வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் பணியாற்றி வந்தார்.

நண்பர் ஒருவரைச் சந்திப்பதற்காக நேற்று முன்தினம் வாழைச்சேனையிலிருந்து மூதூர் அலிஒலுவப் பகுதிக்குச் சென்ற மூதூருக்கும் தோப்பூருக்கும் இடையில் காணாமல் போயுள்ளார். இவரைச் சந்திப்பதற்காக சென்ற நண்பரும் மர்மமான முறையில் காணாமல் போயுள்ளார்.

# ஐரோப்பிய ஒன்றிய யோசனைக்கு ஜாதிக ஹெல உறுமய கடும் எதிர்ப்பு

கொழும்பு —

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தும் அதிகாரத்தை சர்வதேச அமைப்பொன்றிடம் வழங்க வேண்டும் என ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்புக்குழு முன்வைத்துள்ள பரிந்துரையின் மூலம் நாட்டின் இறைமைக்கு கடும் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஓமெல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளதாவது -


வடக்கு - கிழக்கு பிரதேசங்களில் தேர்தலை நடத்த இயலாமல் போனது இலங்கை அரசாங்கம் குறித்து தமிழ் மக்களுக்கு நம்பிக்கை இல்லாமல் போனதே காரணம் என இந்த பரிந்துரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த பரிந்துரைக்கமைய வடக்கு - கிழக்கு பிரதேசங்கள் தேர்தல் நடத்துவதற்குரிய உரிமையையும், பாதுகாப்பும், நிர்வகிக்கும் அதிகாரமும் வெளிநாட்டு அமைப்புக்கு வழங்கப்பட்டால் இந்த நாட்டின் மூன்றில் ஒரு பகுதி இலங்கை அரசாங்கத்துக்கு உரிமையற்று போகும்.

வடக்கு - கிழக்கு பிரதேசம் இலங்கை அரச நிர்வாகத்திலிருந்து நீங்கிய பகுதியாக இந்த பரிந்துரை மூலம் கவனிக்கப்படுவதோடு, இதன் மூலம் விடுதலைப்புலிகளுக்கு மிகப் பெரிய அளவிலான அனுகூலங்கள் கிடைக்கும்.

எனவே, ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்பு குழுவினரால் முன்வைக்கப்பட்ட இந்த பயங்கரமான பரிந்துரையை செயற்படுத்த கூடாதென ''ஜாதிக ஹெல உறுமய'' அரசாங்கத்துக்கு வலியுறுத்தியுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# மும்பை டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி 3/272



மும்பை

இந்திய - இங்கிலாந்து அணிகளுக்கிடையே நேற்று மும்பையில் ஆரம்பமான மூன்றாவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டியில் ஸ்ரரஸின் அபாரமான சதத்தின் துணையுடன் இங்கிலாந்து அணி 3 விக்கெட் இழப்புக்கு 272 ஓட்டங்களைப் பெற்று வலுவான நிலையில் உள்ளது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி இங்கிலாந்தை முதலில் துடுப்பெடுத்தாடுமாறு அழைத்தது.

துடுப்பெடுத்தாட களமிறங்கிய இங்கிலாந்து அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக ஸ்ரரஸும், பெல்லும் களமிறங்கினர். பெல் 18 ஓட்டங்களைப் பெற்று - ஸ்ரீசந்த் வீசிய பந்தை ஹர்பஜன் சிங்கிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து ஷா களமிறங்கினார். ஸ்ரரஸும், ஷாவும் அபாரமாக ஆடினர். இந்தநிலையில் ஷா 8 பவுண்டரிகள் அடங்கலாக 50 ஓட்டங்களுடன் காயம் காரணமாக வெளியேறினார்.

அவரின் இடத்துக்கு பீற்றர்சன் வந்தார். அந்தவேளை, 17 பவுண்டரிகள், 1 சிக்ஸருடன் 128 ஓட்டங்களைப் பெற்றிருந்த ஸ்ரரஸ் - ஹர்பஜன் வீசிய பந்தை டோனியிடம் பிடிகொடுத்து வெளியேறினார்.

தொடர்ந்து கொலிங்வூட் களம் புகுந்தார். ஆனால், 5 பவுண்டரிகள், 1 சிக்ஸர் அடங்கலாக 39 ஓட்டங்களைப் பெற்றிருந்த பீற்றர்சனை ஸ்ரீசந்த் வெளியேற்றினார்.

அடுத்ததாக பிளின்ரொப் களமிறங்கினார். நேற்றைய ஆட்டநேர முடிவில் இங்கிலாந்து அணி 3 விக்கெட் இழப்புக்கு 272 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.



களத்தில் கொலிங்வூட் 11, பிளின்ரொப் 17 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதுள்ளனர்.

பந்துவீச்சில் ஸ்ரீசந்த் 2, ஹர்பஜன் 1 விக்கெட்டை வீழ்த்தினர்.

விளையாட்டு

# பொதுநலவாய நாடுகளுக்கிடையிலான விளையாட்டு பதக்க பட்டியல்

அவுஸ்ரேலியா

அவுஸ்ரேலியாவில் நடைபெற்றுவரும் பொதுநலவாய நாடுகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியி பதக்க பட்டியல் வெளியாகியுள்ளது.

| நாடுகள் | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| அவுஸ்ரேலியா | 23 | 15 | 18 | 56 |
| இங்கிலாந்து | 8 | 11 | 6 | 25 |
| இந்தியா | 7 | 3 | 1 | 11 |
| ஸ்கொட்லான்ட் | 4 | 4 | 3 | 11 |
| தென்னாபிரிக்கா | 3 | 1 | 4 | 8 |
| கனடா | 2 | 10 | 5 | 17 |
| நியூஸிலாந்து | 2 | 3 | 5 | 10 |
| மலேசியா | 1 | 1 | 2 | 4 |
| இலங்கை | 1 | 0 | 0 | 1 |
| பங்களாதேஷ் | 0 | 1 | 0 | 1 |
| பப்புவா நியூகினியா | 0 | 1 | 0 | 1 |
| வேல்ஸ் | 0 | 0 | 3 | 3 |
| சிங்கப்பூர் | 0 | 0 | 2 | 2 |
| பிஜி | 0 | 0 | 1 | 1 |

# முதலாவது ஒருநாள் போட்டி: பங்களாதேஷ் அணி வெற்றி

பொக்ரா

பங்களாதேஷ் - கென்ய அணிகளுக்கிடையில் நேற்று பொக்ராவில் நடைபெற்ற போட்டியில் பங்களாதேஷ் அணி 131 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. ஜாவிட் ஓமரும், நபீஸும் ஆரம்ப வீரர்களாகக் களமிறங்கினர். இந்த ஜோடி அணிக்கு நல்ல அடித்தளத்தை இட்டுக் கொடுத்தது.

இந்தநிலையில் ஓமர் 28 ஓட்டங்களுடன் ஒன்கொண்டோவின் பந்தில் ஆட்டமிழந்தார்.

அடுத்து அப்ரப் அகமட் களமிறங்கினார். இந்த ஜோடியும் சிறப்பாக ஆடி ஓட்டங்களைக் குவித்தவேளையில் - நபீஸ் 91 ஓட்டங்களைப் பெற்று ரன் அவுட்டானார்.

தொடர்ந்து களமிறங்கிய அஷ்ரபுல் 18 ஓட்டங்களுடன் கமாண்டேயின் பந்தில் போல்டானார்.

அவரைத் தொடர்ந்து ரபீக் களமிறங்கினார். இந்தநிலையில் அப்ரப் அகமட் 3 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக 62 ஓட்டங்களைப் பெற்று ஒன்கொண்டோ வீசிய பந்தில் ஆட்டமிழந்தார்.

அடுத்ததாக அலொக் கபாலி களமிறங்கினார். அவர் 1 ஓட்டத்தை பெற்று ரன் அவுட்டானார். தொடர்ந்து களமிறங்கிய மொர்ராசா அதிரடியாக ஆடினார். இந்தநிலையில் ரபீக் 36 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

இந்தநிலையில் களமிறங்கிய காலித் மசூத் 1 ஓட்டத்தைப் பெற்று ரன் அவுட்டானார்.

தொடர்ந்து ரசாக் களமிறங்கினார். 50 ஓவர்கள் நிறைவில் பங்களாதேஷ் அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 301 ஓட்டங்களைப் பெற்றது.

ஆடுகளத்தில் மொர்ராசா 16 பந்துகளில் 5 பவுண்டரிகள், 3 சிக்ஸர்களை விளாசி 44 ஓட்டங்களுடனும், ரசாக் ஓட்டமெதையும் பெறாமலும் ஆடுகளத்தில் உள்ளனர்.

பந்துவீச்சில் ஒன்கொண்டோ 2, ஓடோயோ, கமாண்டே ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து 302 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் கென்ய அணி களமிறங்கியது.



ஓரினோவும், ஒபுயாவும் ஆரம்ப வீரர்களாகக் களமிறங்கினர். இவர்களில் ஓரினோ 6 ஓட்டங்களுடனும், அடுத்து களமிறங்கிய ரிக்கலோ 8 ஓட்டங்களுடனும் ரசலின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தனர்.

தொடர்ந்து ஏ.சுஜி களமிறங்க - ஒபுயா 14 ஓட்டங்களுடன் ரசலின் பந்தில் ஆட்டமிழந்தார். இவரையடுத்து களமிறங்கிய மொடி 1, ஓடோயோ 16 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

அடுத்ததாக மிஷ்ரா, சுஜியுடன் இணைய - 33 ஓட்டங்களைப் பெற்றிருந்த ஏ.சுஜி - ரபீக்கின் பந்தில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய கமாண்டே 4, எம்.சுஜி 12, ஒன்கொண்டே 10 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

இறுதியாக லூசெனோ களமிறங்க - 43 ஓட்டங்களைப் பெற்றிருந்த மிஷ்ரா, அஷ்ரபுல் வீசிய பந்தை காலித் மசூத்திடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

கென்ய அணி 48.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 170 ஓட்டங்களை மட்டுமே பெற்றதனால், 131 ஓட்டங்களால் பங்களாதேஷ் அணி வெற்றிபெற்றது.

லூசெனோ 8 ஓட்டங்களுடன் இறுதிவரை ஆட்டமிழக்காதிருந்தார்.

பந்துவீச்சில் ரசல் 3, ரபீக், அஷ்ரபுல் ஆகியோர் தலா 2, ஹுசேன், ரசாக் இருவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.



அவுஸ்ரேலியாவின் மெல்பேர்ன் நகரில் நடைபெற்றுவரும் பொதுநலவாய நாடுகளின் விளையாட்டுப் போட்டியின் இரட்டையர் பிரிவு துப்பாக்கி சுடும் போட்டியில் தங்கம் வென்ற இந்தியாவின் சுஸ்மா ராணாவும், சறோஜா குமாரியும்.

## விளையாட்டுப்போட்டி

கோப்பாய்

யாழ்.கல்வி வலயத்துக்கு உட்பட்ட கோப்பாய் கோட்ட பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுனர் போட்டிகள் நேற்று நடைபெற்றன. இந்தப் போட்டி தொடர்ந்து இன்றும் நடைபெறவுள்ளதாக கோப்பாய் கோட்ட கல்விப்பணிப்பாளர் அறிவித்தார்.

இந்தப் போட்டிகள் காலை 8.30 மணிமுதல் மாலை 4.30 மணிவரையும் நடைபெறும். (58)

# வெலிங்ரன் டெஸ்ட் போட்டி; நியூஸிலாந்து அணி ஸ்திரம்

வெலிங்ரன்

நியூஸிலாந்து - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையே வெலிங்ரனில் நடைபெற்றுவரும் இரண்டாவது டெஸ்ட் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 192 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

நேற்றுமுன்தினம் ஆடுகளத்தில் பிராட்ஷோ 10, 2 பவுண்டரிகள், 1 சிக்ஸர் அடங்கலாக 16 ஓட்டங்களுடன் பவல் ஆகியோர் நேற்று ஆட்டத்தைத் தொடர்ந்தனர். ஆனால், பவல் மேலதிக ஓட்டமெதையும் பெறாமல் மில்ஸ் வீசிய பந்தை கௌவ்விடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இறுதியாகக் களமிறங்கினார் எட்வேட்ஸ். அவர் ஓட்டமெதையும் பெறாமல் மில்ஸ் வீசிய பந்தை பிளெமிங்கிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இதனால் மேற்கிந்தியத் தீவுகள் அணி 192 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

ஆடுகளத்தில் பிராட்ஷோ 20 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார்.

பந்துவீச்சில் பிராங்ளின் 5, மில்ஸ் 3, மார்ட்டின் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.



தொடர்ந்து நியூஸிலாந்து அணி துடுப்பெடுத்தாட களமிறங்கியது. மார்ஷலுடன், கௌவ் ஆரம்ப வீரராகக் களமிறங்கினார்.

ஆனால் மார்ஷல் 3 ஓட்டங்களைப் பெற்று பிராட்ஷோவின் பந்திலும், கௌவ் ஓட்டமெதையும் பெறாமல் எட்வேட்ஸின் பந்திலும் ஆட்டமிழந்தனர்.

பின்னர் புல்ரனுடன், பிளெமிங் இணைந்து கொண்டார். இவர்கள் இருவரும் அபாரமாக ஆடி மூன்றாவது விக்கெட்டுக்கு இணையாக 165 ஓட்டங்களைச் சேர்த்தனர். அப்போது 15 பவுண்டரிகள், 1 சிக்ஸர் அடங்க லாக 97 ஓட்டங்களைப் பெற்றிருந்த பிளெமிங் - எட்வேட்ஸ் வீசிய பந்தை பிறாவோவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்ததாக அஸ்ரில் களமிறங்கிய சிறிது நேரத்தின் பின்னர், சிறப்பாக ஆடிக்கொண்டிருந்த புல்ரன் 10 பவுண்டரிகள், 3 சிக்ஸர்களுடன் 75 ஓட்டங்களைப் பெற்று பவல் வீசிய பந்தை ரம்டீனிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய ஸ்ரைரிஸ் 8, மக்கலம் 23 ஓட்டங்களுடன் பவலின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தனர்.

அவர்களைத் தொடர்ந்து விற்றோரி களமிறங்கி 6 பவுண்டரிகள் அடங்கலாக 42 ஓட்டங்களைப் பெற்றநிலையில் எட்வேட்ஸ் வீசிய பந்தை சந்தர்போலிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து பிராங்ளின் களமிறங்கினார். நேற்றைய ஆட்டநேரமுடிவில் நியூஸிலாந்து அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 335 ஓட்டங்களைப் பெற்றது.

ஆடுகளத்தில் அஸ்ரில் 7 பவுண்டரிகள் அடங்கலாக 65, பிராங்ளின் 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதுள்ளனர்.

பந்துவீச்சில் எட்வேட்ஸ், பவல் ஆகியோர் தலா 3, பிராட்ஷோ 1 விக்கெட்டைக் கைப்பற்றினர்.

# கேப்ரவுண் டெஸ்ட் போட்டி; அவுஸ்ரேலியா முன்னிலை



கேப்ரவுண்

அவுஸ்ரேலிய - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையே கேப்ரவுணில் நடைபெற்றுவரும் முதலாவது டெஸ்ட் போட்டியில் அவுஸ்ரேலிய அணி 308 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

முதல்நாள் ஆட்டநேரமுடிவில் அவுஸ்ரேலிய அணி 1 விக்கெட் இழப்புக்கு 63 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

ஹைடன் 22, பொண்டிங் 20 ஓட்டங்களுடன் இரண்டாம் ஆட்டத்தைத் தொடர்ந்தனர். இருவரும் சிறப்பாக ஆடி ஓட்டங்களைக் குவித்தனர். இவர்கள் இரண்டாவது விக்கெட்டுக்கு இணைப்பாட்டமாக 154 ஓட்டங்களைப் பெற்றிருந்தவேளை, 8 பவுண்டரிகள், 1 சிக்ஸர் அடங்கலாக 74 ஓட்டங்களைப் பெற்றிருந்த பொண்டிங் - கலிஸின் பந்தில் ஹோலிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து மார்ட்டின் களமிறங்கினார். ஆனால், சிறப்பாக ஆடி 14 பவுண்டரிகள், 1 சிக்ஸருடன் 94 ஓட்டங்களைப் பெற்றிருந்த ஹைடன் என்ரினி வீசிய பந்தை ரூடொல்ப்பிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அவரையடுத்து களமிறங்கிய ஹுசே 6 ஓட்டங்களை மட்டும் பெற்று ஹோல் வீசிய பந்தை பௌச்சரிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து சைமன்ஸ் களமிறங்கினார். அந்தவேளை, 3 பவுண்டரிகளுடன் 22 ஓட்டங்களைப் பெற்றிருந்த மார்ட்டின் கலிஸ் வீசிய பந்தை பௌச்சரிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இந்தநிலையில் களமிறங்கிய கில்கிறிஸ்ட் 12 ஓட்டங்களைப் பெற்று கலிஸ் வீசிய பந்தை சிமித்திடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்ததாக வோன் களமிறங்க 47 பந்துகளில் 3 பவுண்டரிகள், 4 சிக்ஸர்களை விளாசிய சைமன்ஸ் - போஜே வீசிய பந்தை நெல்லிடம் பிடிகொடுத்து 55 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து லீ 0, வோன் 7, கிளார்க் 8 ஓட்டங்களுடன் முறையே என்ரினி, போஜே, நெல் ஆகியோரின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தனர்.

இதனால் அவுஸ்ரேலிய அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 308 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

ஆடுகளத்தில் 6 ஓட்டங்களுடன் கஸ்பரோவிச் ஆட்டமிழக்காதுள்ளார்.


பந்துவீச்சில் கலிஸ் 3, என்ரினி, நெல், போஜே ஆகியோர் தலா 2, ஹோல் 1 விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து தனது இரண்டாவது இனிங்ஸில் ஆடிய தென்னாபிரிக்க அணி 3 விக்கெட் இழப்புக்கு 70 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

அந்த அணியின் ஆரம்ப வீரர்களாக டி-வில்லியர்ஸும், சிமித்தும் களமிறங்கினர். ஆனால் டி-வில்லியர்ஸ் 7 ஓட்டங்களைப் பெற்றநிலையில் - லீ வீசிய பந்தை கில்கிறிஸ்டிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய கிப்ஸ் ஓட்டமெதையும் பெறாமலேயே லீயின் பந்தில் போல்டானார்.

அவரைத் தொடர்ந்து கலிஸ், சிமித்துடன் இணைந்தார். ஆனால், 16 ஓட்டங்களைப் பெற்ற சிமித் - வோனின் பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.



பின்னர் பிறின்ஸ், கலிஸுடன் ஜோடி சேர்ந்தார். இவர்கள் இருவரும் நிதானமாக ஆடினர்.

ஆட்டநேரமுடிவில் தென்னாபிரிக்க அணி 3 விக்கெட்டுக்களை இழந்து 70 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

ஆடுகளத்தில் கலிஸ் 34, பிறின்ஸ் 14 ஓட்டங்களுடன் இறுதிவரை ஆட்டமிழக்காதுள்ளனர்.

பந்துவீச்சில் லீ 2, வோன் 1 விக்கெட்டைக் கைப்பற்றினர்.

## கிரிக்கெட் போட்டி

கொக்குவில்

வளர்மதி முன்னேற்றக் கழகமும், சனசமூக நிலையமும் வருடந்தோறும் நடத்தும் 'விக்ரம், ராஜன், கங்கு' ஞாபகார்த்த தோல்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் -

மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து யாழ்.ஜொலி ஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

# யாழ். நகரின் இடநெருக்கடியைத் தவிர்ப்பதற்காக மக்களின் ஒத்துழைப்பைக் கோரும் வணிகர் கழகம்

யாழ்ப்பாணம்

யாழ்.நகரில் பொது மக்களுக்கும், வர்த்தகர்களுக்கும் ஏற்படும் அசௌகரியங்களைத் தடுக்கும் நோக்குடன் யாழ்.வணிகர் கழக உறுப்பினர்கள் - யாழ்.மாநகர சபை ஆணையாளரைச் சந்தித்துப் புரிந்துணர்வுடனான கலந்துரையாடலை நடத்தி, பின்வரும் நடவடிக்கைகளைப் பொலிஸாரின் உதவியுடன் மேற்கொள்வதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே, யாழ்.நகரை அபிவிருத்தி செய்வதற்கு மக்களின் ஒத்துழைப்பை வணிகர் கழகம் வேண்டி நிற்பதுடன், இதற்குத் தடையாக உள்ளவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாரை வேண்டி நிற்பதாகவும், வணிகர் கழகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியின் இரு பக்கங்களிலுமுள்ள நடைபாதை, அங்காடி வியாபாரிகளால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதால், யாழ். போதனா வைத்தியசாலைக்குச் செல்லும் நோயாளர்களும், வயோதிபரும், பொதுமக்களும் பிரதான பாதையைப் பாவிப்பதால், இது பாதுகாப்பற்றதாகவும், விபத்துக்கள் நிறைந்ததாகவும் அமைந்துள்ளது.

மேலும், இந்த அங்காடி வியாபாரத்தால் நகரின் மத்தியில் நிரந்தர வியாபாரிகள் பாதிக்கப்படுகின்றார்கள். ஆகவே, யாழ்.மாநகர சபையினர் - யாழ்.பொலிஸாரின் உதவியுடன் நடைபாதை வியாபாரிகளை அகற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும்.

யாழ்.நகரின் மத்தியில் மின்சார நிலைய வீதியிலும், வைரவர் கோவில் வீதியிலும், ஸ்ரான்லி வீதியிலிருந்து பஸ் நிலையம் செல்லும் வீதியிலும் நெருக்கமாக சிற்றூர்திகள் ஆக்கிரமித்து நிற்பதால், இங்கு எப்போதும் வாகன விபத்துக்களும், வாகன நெரிசல்களும் காணப்படுவதுடன், இங்கு காணப்படும் தரம் குறைந்த சிற்றூர்திகளினால் அவ்வப்போது வெளியேற்றப்படும் டீசல் புகை மண்டலம் பாதசாரிகளுக்கும், வர்த்தக ஸ்தாபனங்களுக்கும் பெரும் கெடுதியை உண்டுபண்ணுகிறது.

வர்த்தக நிலையங்களுக்கு மிக அண்மையாக நிறுத்தப்படும் சிற்றூர்திகளின் டீசல் புகை மண்டலம் வர்த்தக நிலையங்களில் உள்ள பொருட்களிலும், துணிவகைகளிலும் படிவதால், வர்த்தகர்களுக்குப் பெரும் நஷ்டத்தை ஏற்படுத்துகின்றது. அதனால் வர்த்தகர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றார்கள்.

மேலும், மினிபஸ்கள் வெளிவிடும் புகை சுகாதாரக் கேடுகள் ஏற்பட்டு, வர்த்தகர்கள் பாதிக்கப்படுகின்றனர், ஆகவே, சிற்றூர்திகளை யாழ்.முற்றவெளிப் பகுதிக்குக் கூடிய விரைவில் அனுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்குப் பொலிஸாரின் உதவியைப் பெற்று முனியப்பர் கோவிலுக்குச் செல்லும் வீதியில் உள்ள அங்காடி வியாபாரிகளை கூடிய விரைவில் அகற்றி, விரைவில் அந்தப் பாதையை முற்றவெளியில் சிற்றூர்திகள் தங்குமிடத்துக்குச் செல்வதற்குப் பாவிப்பது எனவும் தீர்மானித்து, இதற்கு யாழ்.பொலி ஸாரின் உதவியைப் பெறுவதற்கு தாம் கடிதம் அனுப்பியுள்ளதாக அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சின்னஞ்சிறு செய்திகள்

### சத்துணவு வழங்கல்

கரவெட்டி

கரவெட்டி தெற்கு திருவள்ளுவர் முன்பள்ளி மாணவர்களுக்கு வட பகுதி சர்வோதய இயக்கத்தால் சத்துணவு வழங்கும் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளதுடன். அந்தப்பகுதி மக்களின் நலன் கருதி அவர்களின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றாகிய மலசலகூடம் அமைக்கும் வேலைத் திட்டம் ஒன்றையும் ஆரம்பிக்குமாறு மக்கள் மகஜர் மூலம் கோரிக்கை விடுக்கப்பட்டதால் அந்த வேலைத் திட்டமும் ஆரம்பிக்கப்படவுள்ளதென உறுதியும் அளிக்கப்பட்டுள்ளது.

இந்த வேலைத் திட்டம் சர்வோதய சிரமதானச் சங்கச் செயலாளர் ஆ.வன்னியசிங்கத்தின் முயற்சியால் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (12)

### தடகளப் போட்டி

வலிகாமம்

வலி.வடக்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களிடையேயான வருடாந்த தடகளப் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு ஸ்ரீபாஸ்கரன் விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

வலி. வடக்கு பிரதேச செயலர் எஸ். முரளிதரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் - அரச அதிபர் கே.கணேஸ் முதன்மை விருந்தினராகவும், யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி றொகான் இராஜசிங்கம், சுன்னாகம் வர்த்தக வங்கி மேலாளர் ஆர்.குலேந்திரன், காங்கேசன்துறை மக்கள் வங்கி மேலாளர் பொன். கணேசமூர்த்தி ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (ரி)

### உபகரணங்கள் அன்பளிப்பு

வடமராட்சி

சுகாதார அமைச்சின் அனுசரணையில் யாழ். மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளரூடாக சுனாமியால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த 17 பாடசாலைகளுக்கு 10 தொலைக்காட்சிப் பெட்டிகள், 10 டீ.வீ.டிக்கள், 10 புறொஜெக்ரர்கள் என்பன பாடசாலைகளின் தேவைகளுக்கேற்ப பகிர்ந்து அன்பளிப்புச் செய்யப்பட்டது.

மேலும் "ஒக்ஸ்பாம்" நிறுவனத்தால் வடமராட்சி வலயத்திற்குட்பட்ட 78 பாடசாலைகளுக்கு முதலுதவிப் பெட்டிகளும் கடந்த வாரம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (12)

### இலவச மருத்துவசேவை

யாழ்ப்பாணம்

வடமராட்சி லயன்ஸ் கழகம் கரணவாய் பிரதேச மக்களுக்கான இலவச மருத்துவசேவை ஒன்றை இன்று நடத்தவுள்ளது.

இந்த மருத்துவசேவை காலை 9.30 மணிதொடக்கம் பி.பகல்1 மணி வரை கரணவாய் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. இந்தச் சேவையை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை வைத்திய அதிகாரி எஸ்.கதிரவேற்பிள்ளை, யாழ்.போதனாவைத்தியசாலை வைத்திய நிபுணர்களும், யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட இறுதியாண்டு மாணவர்களும் இணைந்து வழங்கவுள்ளனர்.

அத்துடன் கண்பரிசோதனை செய்யப்பட்டு மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படுவதுடன் குருதி அமுக்கம் சிறுநீர்ப் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படும். (து)

# சலரோகம் விவரண தொகுப்பு இறுவட்டு இன்று வெளியீடு

யாழ்ப்பாணம்

வைத்திய நிபுணர் எஸ்.சிவன்சுதனின் வழிகாட்டலில் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட 23 ஆம் அணி மாணவர்களின் ஆக்கத்தில் உருவான சலரோக நோய் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான "சலரோகம்" விவரணத் தொகுப்பு இறுவட்டு இன்று வெளியிடப்படவுள்ளது.

இன்று காலை 10.30 மணியளவில் யாழ். போதனா வைத்தியசாலை தாதியர் பயிற்சிக் கல்லூரி விரிவுரை மண்டபத்தில் இடம் பெறவுள்ள இந்த வெளியீட்டு நிகழ்வில்- இலங்கை வங்கியின் வடபிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர் க.பாலசுப்பிரமணியம் பிரதம விருந்தினராகவும், யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி அ.எ.ஞானசோதி சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த இறுவட்டுக்கான விமர்சன உரையை - பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் முன்னாள் அதிபர் சோ.பத்மநாதன் நிகழ்த்தவுள்ளார்.

# பாலைதீவு புனித அந்தோனியார் திருநாள் திருப்பலி இன்றாகும்



நெடுந்தீவு

பாலைதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த தவக்கால திருநாள் கடந்த வெள்ளிக்கிழமை மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இன்று வரை இடம்பெறவுள்ளது.

நேற்று சனிக்கிழமை மாலை நற்கருணை எழுந்தேற்றமும், திருப்பலியும் இடம்பெற்றதுடன் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை திருநாள் திருப்பலியும், திருச்சொரூப பவனியும் இடம்பெற்று வருடாந்த தவக்கால திருநாள் நிறைவடையவுள்ளது.

பாலைதீவு திருநாள் நிகழ்வில் இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசம், விடுதலைப் புலிகளது கட்டுப்பாட்டுப் பிரதேசம் என்பவற்றில் இருந்து பெருந்திரளான மக்களும், மதகுருமாரும் கலந்துகொள்வர். (113)

# ஆசிரிய ஆலோசகர் பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

வேலணை

தீவக கல்வி வலயத்தில் தகவல் தொழில்நுட்ப பாட ஆசிரியர் ஆலோசகர் பதவிக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

அரசாங்க பாடசாலைகளில் 5 வருடத்திற்கு குறையாத சேவைக் காலத்தைக் கொண்டிருப்பதுடன், 2 வருட கணினித்துறையில் கற்பித்தல் அனுபவம், பயிற்றப்பட்ட அல்லது பட்டதாரி ஆசிரியராக இருத்தல் வேண்டும்.

க.பொ.த சாதாரண தரத்தில் ஆங்கில பாடத்தில் எஸ் தரத்துடன், ஆங்கில மொழியில் புலமை அல்லது ஆங்கிலமொழி மூலத்தில் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் ஆறுமாதத்துக்குக் குறையாத கணினி டிப்ளோமா தரத்திற்கு குறையாத கற்கை நெறியைப் பூர்த்தி செய்திருத்தல் போன்ற தகமையுடையவர்கள் தமது விண்ணப்பங்களை தீவக கல்வி வலயத்துக்கு எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் வி.ராதாகிருஸ்ஷணன் கேட்டுள்ளார்.

## பயிற்சி நெறி!

யாழ்ப்பாணம்

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ்.மாவட்ட அலுவலகம், மோட்டார் சைக்கிள் திருத்தும் பயிற்சிநெறியை நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் ஆரம்பிக்கவுள்ளது.

சர்வதேச கனேடிய பல்கலைக் கழக அனுசரணையுடன் ஆரம்பிக்கப்படவுள்ள இந்தப் பயிற்சி நெறிக்காக ஏற்கனவே இளைஞர், யுவதிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஆறு மாதங்களைக் கொண்ட இந்தப் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்பவர்களுக்கு சுயதொழில் வாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும். இந்தப் பயிற்சி நெறி ஏப்ரல் மாதத்தில் ஆரம்பிக்கப்படவிருப்பதாக இளைஞர் சேவை மன்ற வட்டாரங்கள் தெரிவித்தன. (ரி)

## மெய்வல்லுநர் போட்டி

நெடுந்தீவு

நெடுந்தீவு மகாவித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் திருமதி.சா. கிருஷ்ணதாஸ் தலைமையில் இடம் பெறவுள்ள இந்தப் போட்டியில் பிரதம விருந்தினராக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன் கலந்து கொள்ளவுள்ளார்.

இந்தப் போட்டி நிகழ்வில் சிறப்பு நிகழ்வாக இடைவேளையின்போது ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கிடையிலான உடற்பயிற்சிப் போட்டியும் இடம்பெறவுள்ளது. (113)

# வயல் நிலங்களில் செய்கை ஆரம்பிக்க கமநல திணைக்களம் உதவவில்லை !

## கோயிலாமனை விவசாயிகள் குற்றச்சாட்டு

கொடிகாமம்

கொடிகாமம் கோயிலாமனைப் பகுதியில் படையினரால் விடுவிக்கப்பட்ட வயல் நிலங்களில் மீளப் பயிர்ச்செய்கைகளை ஆரம்பிப்பதற்கு கமநல சேவைத் திணைக்களம் எந்தவிதமான உதவிகளையும் வழங்கவில்லை என அந்தப்பகுதி விவசாயிகள் குற்றம்சாட்டியுள்ளனர்.

கொடிகாமம் கோயிலாமனைப் பகுதியில் பாதுகாப்பு வலயமாக படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த 16 ஹெக்டேயர் வயல் நிலப்பரப்பு கடந்த ஆண்டில் விடுவிக்கப்பட்டு, அங்கு பயிர்ச்செய்கைகளை மேற்கொள்வதற்கு படையினர் அனுமதி வழங்கியும் இருந்தனர்.

இவ்வாறு மேற்படி பகுதியில் பயிர்ச்செய்கையில் ஈடுபட படைத்தரப்பு அனுமதித்துள்ள போதும், விடுவிக்கப்பட்ட பிரதேசத்தில் ஏற்கனவே அங்கு படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த காலத்தில் அமைக்கப்பட்டிருந்த பதுங்குகுழிகள், காவலரண்கள், மண் அணைகள் என்பன இன்னும் அகற்றப்படவில்லை.

எனவே, இவற்றை அகற்றி அங்கு பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வசதி செய்து தருமாறு இந்தப்பகுதி மக்கள் கடந்த ஒருவருட காலமாக கமநல சேவைகள் திணைக்களத்திடம் கோரி வருகின்றபோதும், எந்தவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை என அவர்கள் மேலும் சுட்டிக்காட்டியுள்ளனர். (அ)

# தவக்கால நற்சிந்தனை



ஆலயங்களில் வருடாந்த விழா வருகிறது என்றால் இருசாரார் பெரும் ஆயத்தங்கள் செய்வது அன்றும், இன்றும் வழக்கமாகிவிட்டது. ஆலய விழாக் குழுவினர் அந்த வருடத்து விழாவை எப்படி பக்திச் சிறப்பாக்கலாம் என்பதில் கண்ணும் கருத்துமாகச் சில மாதங்களுக்கு முன்னரே திட்டம் போட்டுச் செயற்படத் தொடங்கிவிடுவர். அதேநேரம் மறுசாரார் - இவர்கள் வியாபாரிகள், வர்த்தக நோக்கத்தோடு பணம் கறக்கும் பாணியில் இறங்கிவிடுவார்கள். இங்குதான் அன்று யேசுவுக்கும், யூதர்களுக்கும் இடையில் வாய்ப்போர் மூண்டது. "என் தந்தையின் இல்லத்தை சந்தையாக்காதீர்கள்" என்று ஆவேசத்தோடு கூறி அங்கிருந்தவர்களை அடித்துத் துரத்தினார். இந்தச் செயலுக்கு அடாது கூறிய யூதர்கள் சவால் விட்டார்கள். அதிகாரம் பற்றிக் கேள்வி எழுப்பினார்கள். அவர்களுக்கு அந்தவேளை இருந்த எண்ணம் பணம் சேர்த்தல். வேடிக்கை காட்டல். ஆனால், யேசுவோ ஆலயம் வருவோருக்கு ஆலயச் சூழல் புனிதமாக இருக்கவேண்டும். அந்தப் புனிதத்தை இவர்கள் கெடுத்தனால் தான் பிரச்சினை மூண்டது. இதே போல் எமது இதயமும் இறைவன் வாழும் ஆலயம். அதை நாமும் புறச்சூழல் தாக்கங்களில் இருந்து புனிதமாகக் காக்கவேண்டும். இறைவனுக்கு இடமளிக்கவேண்டும்.

- மோ.தார்சீசியஸ்

# பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

யாழ்ப்பாணம்

பிரதேச செயலக பிரிவுகளில் உள்ள இளைஞர் கழகங்களுக்கிடையே யான புதிய நிர்வாகத் தெரிவும், வருடாந்த பொதுக்கூட்டமும் எதிர்வரும் 23 ஆம் திகதி காலை 10 மணிக்கு தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ்.மாவட்ட அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள சம்பந்தப்பட்ட இளைஞ[illegible] கழகப் பிரதிநிதிகளை இந்தக் கூட்டத்தில் தவறாது கலந்துகொள்ளுமாறு தேசி[illegible] இளைஞர் சேவைகள் மன்ற யாழ்.மாவட்ட அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ரி)


# சிற்றூழியர்களுக்கான நேர்முகத்தேர்வு!


யாழ்ப்பாணம்

வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள ஆயுர்வேத வைத்தியசாலைகளுக்கு சிற்றூழியர்களை ஆட்சேர்த்துக் கொள்வதற்கான நேர்முகப் பரீட்சை, திருகோணமலை கப்பல்துறை சுதேச மருத்துவத் திணைக்களத்தில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 21 ஆம் திகதி தொடக்கம் தொடர்ந்து மூன்று தினங்கள் நடைபெறவுள்ள இந்த நேர்முகத் தேர்வு - ஏற்கனவே நடைபெற்ற நேர்முகத் தேர்வுக்கு சமூகமளிக்காதோருக்கே நடைபெறவுள்ளது.

ஆயுர்வேத வைத்தியசாலைகளில் நிலவும் சிற்றூழியர் பற்றாக்குறையை நிவர்த்திசெய்யும் வகையிலேயே இந்த ஆட்சேர்ப்பு நடைபெறவுள்ளது.





ஹேர்சல்ஸ் கிப்ஸ் - நிமிர்ந்தவனைக் கவிழ்த்தவன்

ஜோசப் கிருஸ்னாவின்

# உலகத்தை உலுக்கிய ஒருநாள்


ரிக்கி பொண்ரிங் - நிமிர்ந்து நின்றவன்.

கடந்த ஞாயிறு மாலை முன்னிரவு மற்றும் நள்ளிரவை அண்டிய நேரம் ஒரு பிரளயம் நடந்துகொண்டிருந்தது. அதனை முழுதாக அனுபவிக்கமுடியாவிட்டாலும், இடைக் கிடையே நிறைய கிரிக்கெட் ரசிகர்கள் அறிந்து கொண்டிருந் தார்கள். ஆனாலும், திங்கள் விடிந்ததும் வானொலிகள், பத்திரிகைகள் எல்லாவற்றிலும் வந்த செய்தி கிரிக்கெட் ரசிகர் களை மூர்ச்சித்து விடும் அளவுக்கு அமைந்துவிட்டது.

தென்னாபிரிக்க, அவுஸ்ரேலிய அணிகளுக்கு இடை யிலான ஐந்தாவதும், தொடரை நிர்ணயிப்பதுமான ஒருநாள் ஆட்டம் ஜொஹன்ஸ்பேர்க் வண்டரஸ் மைதானத்தில் ஆரம் பித்தபோது நல்லதொரு ஆட்டத்தை ரசிகர்கள் எதிர்பார்த்திருப் பார்களே ஒழிய, அதற்கு மேலாக ஒருநாள் போட்டி வரலா றொன்று செதுக்கப்படப் போகிறது என்று கனவு கூட கண்டிருக்க மாட்டார்கள்.

இந்த ஆட்டத்தின் ஓட்ட எண்ணிக்கைகள் ஏற்படுத்திய சாதனைகள், சரிக்கப்பட்ட சாதனைகள் எல்லாம் ஊடகங்களில் விலாவாரியாக வெளிவந்துவிட்டன.

ஆனால், இப்படியொரு விளையாட்டுச்செய்தி ஒருநாள் கிரிக்கெட்டைப் பொறுத்து இனிவருமா என்ற அண்மைக் காலத்திலோ, நீண்டகாலத்திலோ வரும் என்று நம்பிக்கை யுடன் கூற முடியவில்லை. ஒரு கனவாக இருந்த 400 என்ற எல்லைக்கோடு கடக்கப்பட்டு 434 ஆகியதும், அடுத்த மூன்று மணித்தியாலத்தில் அந்த எல்லைக்கோடு தகர்ந்து 438 எல்லை என்றாகியதும் மந்திரமா? மாயமா? இன்னொரு முறை கூட மிகப்பலமான ஒரு அணி பலம் குறைந்த அணிக்கு எதிராக 400 ஓட்டங்கள் அடிக்கக்கூடும். ஆனால், எதிரணி 400 ஐ நினைத்தும் பார்க்கமுடியாத நிலையே ஏற்படும். அதனால் தான் இப்படியானதொரு ஒருநாள் போட்டி இனி நடைபெறுவது துர்லபம் என்று நம்பிக்கையுடன் கூறமுடிகிறது.

இதற்கு முன்னரும் நானூறை அண்டிய ஓட்டங்கள் பெறப்பட்டிருந்தன. அதாவது நானூறை எட்ட பத்து ஓட்டங்களுக்கும் குறைவான எண்ணிக்கைக்கு போயிருக்கின்றன. 398, 397, 391 என்ற மூன்றையும் குறிப்பிட லாம். இவை முறையே பலமான அணிகள் கென்யா, சிம்பாப்வே, பங்களாதேஷ் அணிக்கு எதிராக பெறப்பட்டவை என்ற வகையில், இந்தப் பிரளயத்துடன் ஒப்பிடுவது பொருத்தமாகப் படவில்லை. இங்கு மோதிய இரண்டு அணிகளும் வல்லரசுகள். இதுவே இங்கு முக்கியத்து வம் பெறுகிறது. எனவே, இந்த ஆட்டம் என்ன சொல்கிறது என்று பார்த்தால், இதனை எதனோடும் ஒப்பிடாதீர்கள். இது தனித்துவமானது, தகர்க்கமுடியாதது, தவித்த முயல் அடிக்கும் ஆட்டமல்ல என்ற சொல்கிறது.

இதனால்தான் கிரிக்கெட் உலகம் இன்று பிரமித்துப்போய் இருக்கிறது. இங்கு நடந்தது ஒரு கிரிக்கெட் ஆட்டம் என்பதைவிட, இரண்டு அணிகளும் இணைந்து அரங்கேற்றிய இரண்டாவது சுனாமி என்று கூறலாம். இதனாலேயே முறிய டிக்கப்பட முடியாத ஒரு சாதனையாக இந்த ஆட்டம் அமைந்து விட்டது. இதில் என்ன துயரமென்றால், எல்லா வகையிலும் பேசப்பட்ட ஒரு ஆட்டத்தில் ஒரு சில பந்துவீச்சாளர்கள் பயங்கரமாகத் தண்டிக்கப்பட்டு விட்டதுதான்.

இன்னொன்று 1997 இல் இந்தியாவுக்கு எதிரான போட்டி யொன்றில் சென்னையில் பாகிஸ்தான் வீரர் சயிட்அன்வர் குவித்த - இன்று வரை ஒரு நாள் போட்டிகளில் சாதனையாக இருக்கும் 194 ஓட்டங்கள் என்ற எண்ணிக்கையை றிக்கி பொண்டிங்கோ, ஹேர்சல்ஸ் கிப்ஸோ கடந்து 200 எண்ணிக்கையை எட்டமுடியவில்லை என்பதுதான். அதிஷ்டமோ, துரதிஷ்டமோ இந்தக் காட்டாற்று வெள்ளத்தில் இந்தச்சாதனை தப்பித்துக்கொண்டது.

விமலனின்

# நெஞ்சினில் வேண்டாம் நீங்கள்

சர்வதேச கிரிக்கெட்டில் பொதுவாக ஆட்டங்கள் நடைபெறும் தருணங்களில் போட்டி முடிவுக் காக இறுதி வரை காத்திருக்கவேண்டிய அவசியமே ஏற்படும். ஏனென்றால் ஆட்டத்தில் திடீர் திருப்பங்கள் ஏற்பட்டு, விறுவிறுப்பின் மத்தியில் முடிவு கைமாறிச் செல்லலாம் என்ற காரணத்தினால் ஆகும்.

ஆனால், மேற்கிந்தியத்தீவுகள் அணியுடனான போட்டிகளில் மட்டும் தோல்வி தான் முடிவு என்பது முன்னரே தெரிந்து, ஆட்டத்தை பார்ப்பது போன்றதொரு பிரக்ஞை ஏற்படுவது ஒருதசாப்த காலமாகவே தவிர்த்துக்கொள்ள முடிவதில்லை என்பது எவரும் மறுதலிக்க முடியாத ஒரு துயரம்.


தற்போது நியூசிலாந்துக்கு சுற்றுப்பயணத்தை மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணி - நியூசிலாந்துடன் நடைபெற்ற ஒரு நாள் தொடரை இழந்ததோடு, ஒக்லண்டில் நடை பெற்ற முதல் டெஸ்ட் போட்டியிலும் வழமைபோல் மண் கவ்வி இருக்கிறது.


ஷேன் பொண்ட் - திறமைக்கு மரியாதை

இந்த டெஸ்ட் போட்டியில் 291 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணி - 2 நாட்கள் மீதமிருந்த நிலையில் விக்கெட்டுக்களை பாதுகாக் கும் தற்காப்பு ஆட்டம் ஆடினாலே வெற்றி கிடைத்திருக்கும். அந்த வகை யில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான கிறிஸ் கெயில் - டரல் கங்கா ஜோடி கொடுத்த அற்புதமான அடித்தளத்தை பார்த்ததும், இந்தப் போட்டியில் மேற் கிந்தியத்தீவுகள் அணி வெற்றி பெற்று தன் சாபத்துக்கெல்லாம் விமோசனம் தேடிக்கொள்ளும் என்றே ரசிகர்கள் எண்ணியிருப்பார்கள்.

ஆனாலும் 148 ஓட்டங்களில் ஆரம்ப ஜோடியின் ஆட்டம் முடிவுக்கு வர துரதிஷ்டம் துரத்தலாயிற்று. அதிலும் நட்சத்திர வீரர் பிறைன் லாறா ஓட்டம் எதையும் எடுக்காமல் ஷேன் பொண்டின் பந்து வீச்சில் ஆட்டமிழந் ததும் வழமைபோல் தடுமாறத்தொடாங் கியது மேற்கிந்தியத் தீவு கள் அணி.

இருப்பினும் 4ஆம் நாள் ஆட்ட நேரமுடி வில் 8விக்கெட் இழப் புக்கு 246 ஓட்டங்க ளுடன் ஆட்டம் இடைநிறுத்தப்பட்ட போது - 2004இல் இங்கிலாந்தில் நடை பெற்ற ஐ.சி.சி சம்பியன் ஷிப் இறுதிப்போட்டி ரசிகர் கள் மனதில் நிழலாடியதால், ஒரு நம்பிக்கை ஒளிக்கீற்று மனதில் தென்படவே தோன்றி யது. ஏனென்றால் ஆடுகளத் தில் ஆட்டமிழக்காமல் நின் றது இயன் பிராட்ஷோ - ஜெரோம் ரெய்லர் ஜோடி.


பிறைன் லாரா - மன்னிப்பே கிடையாது

ஐ.சி.சி சம்பியன் ஷிப் இறுதிப்போட்டியில் இங்கிலாந்து நிர்ணயித்த 218 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கை நோக்கி மேற்கிந்திய தீவுகள் அணி சந்தோசமாகவே துடுப்பாடத் தொடங்கியது. ஒரு கட்டத்தில் 8 விக்கெட்டுக்களை இழந்து 147 ஓட்டங்களுக்குள் தடுமாறியபோது - மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு ஆபத்பாந்தவரானது பிராட்ஷோ - பிரௌணி ஜோடி. 9ஆவது விக்கெட்டுக்காக 71 ஓட்டங்களைக் குவித்து, வெற்றிக் கிண்ணத்தை கரீபியன் தீவுகளுக்கு கொண்டுசெல்ல வழிவகுத்தது இந்த ஜோடி.

இதனால் ஒக்லண்ட் டெஸ்ட் போட்டியின் இறுதி நாளன்றும் குறிப்பாக பிராட்ஷோ மீதான நம்பிக்கை சற்றுத் தூக்கலாக இருந்ததோடு - 5ஆம் நாள் சூர்யோதயம் அஸ்தமித்துச் செல்லும் மேற்கிந்தியத்தீவுகளின் கிரிக்கெட்டுக்கு விடியலைத் தரப்போவதாகவே ரசிகர்கள் நம்பியிருந்தனர்.

ஆனாலும், “அதிஷ்டம் ஒரு முறைதான் கதவைத் தட்டும்” என்பது போல இறுதிநாளன்று பிராட்ஷோ 9 ஆவது விக்கெட்டாக 10 ஓட்டங்களுடனும், ஜெரோம் ரெய்லர் 13 ஓட்டங் களுட னும் ஆட்டமிழக்க 27 ஓட்டங்களால் நியூஸிலாந்து வெற்றிக் கனியைச் சுவைத்தது. துன்பங்குக்கு 69 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை சரித்து, மேற்கிந்தியத்தீவு கள் அணியை மீளவே முடியாதபடி உண்டு இல்லை என்று பண்ணிவிட்ட ஷேன் பொண்ட், ஆட்டநாயகன் விருதை தட்டிச்சென்றார்.

லிவிங்ஸ்ரனின்

# தேறாத விளையாட்டுப் பிள்ளை


இது அதற்காக அல்ல.

வன்முறை விளையாட்டுக்களை இலங்கையில் தடை செய்யுங்கள் என்று ஒரு விளையாட்டுத்துறை விமர்சகர் நீண்ட கட்டுரை ஒன்றைப் பத்திரிகையில் எழுதியுள்ளார். அதில் ஒன்று துப்பாக்கி சுடும் போட்டி. இது தேவையா இல்லையா என்பதை விட, அவர் சுட்டிக் காட்டும் சில விடயங்கள் சுவையானவை. அதாவது 2006 மெல்பேர்ண் கொமன்வெல்த் போட்டிகளுக்குச் சென்றுள்ள துப்பாக்கிசுடும் போட்டியில் கலந்துகொள்ளும் வீரர்கள் போதிய பயிற்சிகள் ஏதும் பெறவில்லையாம். அதற்குக் காரணம் அவர்களுக்குத் தேவையான வெடிபொருட்கள் எவையும் சரியாக வழங்கப்படவில்லையாம்.


வேண்டாம் இரத்தக் களரி

இந்த நிலையில் இவர்கள் மெல்பேர்ணில் என்னத்தைச் சாதிக்க முடியும் என்று கேட்பவர் - ஒருவகையில் யால வன விலங்குப் பிரதேச உயிரினங்கள் இதனால் பெருமூச்சு விட்டிருக்கும் என்கிறார். இல்லாவிட்டால் பயிற்சி என்ற வகையில் அந்த உயிரினங்கள் குறிவைக் கப்பட்டிருக்குமாம்.

அடுத்ததாக இவர் குறிப்பிட்டுச் சொல்வது குத்துச் சண்டைப் போட்டிகள் பற்றியாகும். ஏற்கனவே சில பாடசா லைகளில் குத்துச் சண்டை விளையாட்டு இருந்தாலும், தற்போது அதை மேலும் வலுப்படுத்த முயல்வதாக குற் றஞ்சாட்டுகிறார் இவர். இந்த விளையாட்டு மாணவர் களை உடல்ரீதியாகப் பாதிப்புக்குள்ளாக்குவதுடன், மனோரீதியில் வக்கிரம் கொண்ட வர்களாக மாற்றிவிடும் என்கிறார். இது எந்தளவு உண்மை. குத்துச் சண்டைப் போட்டிகள் பாடசாலை மட்டத்தில் அவசியமா? இல்லையா? என்பது பற்றி ஆராய வேண்டியதும் தேவை, தேவையின்மை பொறுத்தும் தீர்மானிக்க வேண்டியது கல்வி அமைச்சின் பொறுப்பு.

இன்னொன்று வில் எய்தும்போட்டி (Archery) இந்தப் போட்டியும் நாகரீக மனிதன் விரும்பும் ஒரு விளையாட்டாக எடுத்துக் கொள்ள முடியாது என்பது இவரது வாதம். இந்தப் போட்டிப் பயிற்சிக்காக மிருகங்கள், பறவைகள் இலக்குவைக்கப்படுகின்றன என்று அவர் கூறவில்லை என்றாலும், இது உயிரை இலக்குவைக்கும் மனப்பிரதிமையை ஏற்படுத்தும் என்று எண்ணுகிறாரோ தெரியவில்லை.

உண்மையில் இந்த விளையாட்டுக்களின் நிர்வாகக் குறைபாடுகள், ரசிகர்களின் எண்ணிக்கைக் குறைவு, பெரிதும் அக்கறைப்படாத, நிறைய வீரர்களின் ஆர்வமின்மை என்பன இவருக்கு எரிச்சலூட்டி இருக்கவேண்டும். இதில் நியாயம் உண்டு. இந்த விளையாட்டுக்கள் பிரபல்யப்பட்டு, பல்லாயிரக் கணக்கான, பல இலட்சக் கணக்கான ரசிகர்களை மகிழ்விக்காத போதும் - நாட்டு மக்களின் இலட்சக்கணக்கான ரூபாய்களை ஏப்பமிட்டுக் கொண்டு இருக்கின்றன அல்லவா.

நிர்மலனின்


# மாறி வீசும் காற்று


ராபெல் நாடல் - எழுக, எழுக

ஆண்கள் ஒற்றையர் ரெனிஸ் போட்டிகளில் சிலகாலமாக வெற்றிக்கிண்ணம் பெறுபவர் யாரென்றால் எந்தவித சந்தேகமும் இன்றி சுவிற்சர்லாந்தின் றோஜர் பெடரர் என்று இலகுவாகக் கூறிவிடலாம். ஆனால் துபாய் ரெனிஸ்போட்டியின் இறுதிப் போட்டி வேறுவிதமாக அமைந்துவிட்டது. துபாய் கிண்ணத்தை வென்றவரே - தானா றோஜர் பெடரரைத் தோற்கடித்தது என்று நம்பமுடியாமல் தவிக்கிறார். அவர் தான் ரப்யெல் நடால். ஸ்பானியாவைச் சேர்ந்தவர். பத்தொன்பது வயது மட்டுமே நிறைந்தவர். இதுவரையில் நான்கு முறை றோஜர் பெடரரைச் சந்தித்த நடால் - மூன்று சந்தர்ப்பங்களில் இவரை வெற்றி கண்டிருக்கிறார். இறுதிப்போட்டி ஒன்றில் வெல்வது இதுவே முதல் தடவை. 2005 நடாலின் வாழ்வில் முக்கியமானது. பிரெஞ் ஓபன் ரெனிஸ் போட்டிகளில் அரையிறுதிவரை ஆட்டமொன்றில் பெடரரை வீழ்த்திய நடால் தொடர்ந்து பிரெஞ் ஆடவர் கிண்ணத்தை வென்றவர்.

றோஜர் பெடரர் இந்த வருட ஆரம்பத்தில் அவுஸ்ரேலிய ஓபன் ரெனிஸ் கிண்ணத்தை வென்றவர். அதன் பின் டோஹா வெற்றிக் கிண்ணத்தையும் வென்றவர். ஆனால் துபாய் இவருக்குக் கை கொடுக்கவில்லை. துபாய் கிண்ணம் வென்ற நடால் தன் உணர்வுகளைக் காட்டும் விதமே வித்தியாசமாக இருக்கிறது.

உலகின் அதிசிறந்த முதன்மை வீரரை நான் தோற்கடிக்க அதுவே ஒருவரலாறாகிவிட்டது என்று கூறும்போது - நடாலின் கண்களில் கண்ணீர் துளிர்கிறது. பெடரர் தன் வெற்றியை தன் அலட்சியமான விளையாட்டுப் போக்கால் இழந்தேன் என்று சாட்டுக்கூறாமல் நடால் அற்புதமாக விளையாடினார், எனது விளையாட்டில் சில தவறுகளை நான் செய்திருந்தேன். ஆனால் அதுவே நடாலின் வெற்றிக்கு காரணம் என்று சொல்ல மாட்டேன். இன்றைய நாள் அவருக்கு உரியது தான். அற்புதமான விளையாட்டுத் திறமையை அவர் வெளிப்படுத்தினார் என்று மனம் திறந்து பாராட்டுகின்றார்.



ஹொஜர் பெடரர் - அல்ப்ஸ் மலைச் சிகரம்

மகளிர் ஒற்றையர் ஆட்டத்தில் யார் வெல்வார் என்று ஊகிக்க முடியாத அளவுக்கு நிறைய வீராங்கனைகள் உள்ளனர். ஆனால் தற்போது ஆடவர் ஒற்றையர் ஆட்டத்தில் றோஜர் பெடரரின் வெற்றி வரிசைக்கு ஒரு தடை போட்டுள்ளவர் ரபயெல் நடால். இவரைப் போலவே இன்னும் சிலர் வந்தால் தான், ஆடவர் ஒற்றையர் ரெனிஸ் ஆட்டத்தின் பால் ஒரு ஈர்ப்பு வரும் - நன்றி நடால்.

மக்டலினின்

# தீப்பொறி பறக்கட்டும்

அதிருப்திக் குரல்கள் பல பக்கங்களிலும் ஓயாது எழுந்து, மேலும் மேலும் வீச்சுப் பெற்றுக் கொண்டிருக்கும் வேளையில் தற்போது பிரச்சினைக்கான தீர்வு வேண்டி, சர்ச்சை நாட்டின் அதியுயர் பீடத் துக்கு சமர்ப்பிக்கப்படும் நிலைஉருவாகிவிட்டது. தற்போது இலங்கை கிரிக்கெட் நிர்வாகத்தைக் கொண்டு நடத்தும் இடைக்கால சபையை கலையுங்கள், உடனடியாக ஜனநாயக ரீதியாகக் கிரிக்கெட் சபைக்கான தேர்தலை நடத்துங்கள் என்று அரவிந்த டீ சில்வா, ஹஷான் திலகரட்ண, அஸந்த டீ மெல் மூவரும் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். அவர்கள் தமது விண்ணப்பத்தில் பிழையானவர்களின் கையில் இலங்கைக் கிரிக்கெட் சிக்கிப் பாதாளத்தில் வீழ்வ தைத் தவிர்க்க உதவுங் கள் என்று வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். ஜனாதிபதியிடம் முறையிடுவதைத் தவிர வேறு வழியில்லை என்று அரவிந்த கூற - ஹஷான் தன் கருத்தாக இனவாத தென்னாபிரிக்காவுக்குக் கிரிக்கெட் ஆடச்சென்ற, நாட்டுக்குத் துரோகம் செய்த கிரிக்கெட் வீரர்களை தெரிவாளர்களாக வைத்திருக்கும் அபத்தம் நடந்து கொண்டிருக்கிறது என்று குமுறி இருக்கிறார். மேலும் தற்போது நடைபெற்று முடிவடைந்த 19 வயதுக்குட்பட்டோரின் உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளில் இலங்கையால் சோபிக்க முடியவில்லை. அதற்குக் காரணம் சரியான பயிற்றுனர்கள் இன்மை. இதற்குக் காரணம் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புச் சீர்கேடுகள் என்று ஆதாரம் காட்டுகிறார்கள்.


ஹஷான் திலகரட்ண - உன்னால் முடியும்


அரவிந்த டீ சில்வா - விடாதே போராடு

இந்த மூவரும் வெகுண்டெழ முக்கியமானதொரு உடனடிக் காரணம் இருக்கிறது. இடைக்கால நிர்வாக சபை திடீர் என்று மாகாணங்களுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டிகள் பெறுமதியற்றவை என்று எண்ணியோ என்னவோ அதனை நிறுத்திக் கொண்டுள்ளது. ஆனால், ஒரு அங்கீகாரம் பெற்ற அந்தப் போட்டியை எதுவித பொறுப்புணர்ச்சியும் இன்றி இவர்கள் ரத்துச்செய்து விட்டனர் என்று குமுறுகின்றார்கள்.

மற்றது இந்தக் குற்றச்சாட்டோடு இணைந்து பழைய தோம்புகள் கிளறப்பட்டு, நிதிநிர்வாகச் சீர்கேடுகள் போன்ற விடயங்களும் இடைக் கால நிர்வாகசபையின் செயற்பாடுகள் என விமர்சிக்கப்படுகின்றன.

ஒன்று நிச்சயமாகத் தெரிகிறது. அதாவது ஆரோக்கியமாக இருந்த இலங்கையின் கிரிக்கெட் விளையாட்டில் ஏதோ ஒருநோய் தொற்றி விட்டது என்பது தெளிவாகத் தெரிகிறது. நோயைத் தீர்க்க உரியவர்கள் யாரும் பெரிதாக கவனம் எடுப்பதாகத் தெரியவில்லை. இந்த நிலையில் குமுறி எழுந்திருக்கிறார்கள் உரியவர்கள், தகுதியுடையவர்கள், திறமை வாய்ந்தவர்கள் இப்போதே நடவடிக்கை எடுத்தால் கிரிக்கெட் உயிர் பிழைக்கும். இல்லாவிட்டால் படுத்த படுக்கையாகி பல வருடங்கள் முனகிக் கொண்டிருக்க வேண்டிய நிலை உருவாகிவிடும்.


'இனியும் அப்பா குதிருக்குள் இல்லை' என்று உரியவர்கள் கண்டும் காணாதும் இருக்க முடியாது. கண்டுகொண்டே ஆகவேண்டிய நிலை உருவாகிவிட்டது.

EXPOAIR
your friend in the skies...
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...
தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com





# கிளிநொச்சி - சோலைநகர் கிராமத்தில் கிராமஅபிவிருத்தி செயலக கட்டடம் திறப்பு






கிளிநொச்சி—

கிளிநொச்சி - சோலைநகர்க் கிராமத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் கிராம அபிவிருத்திச் செயலகக் கட்டடத் தொகுதி நேற்று முன்தினம் நண்பகல் 12.30 மணியளவில் திறந்துவைக்கப்பட்டது.

சமுதாய மீள் கட்டமைப்புத்திட்டத்தின் சோலைக் கிராம இணைப்பாளர் புஸ்பகலா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பொதுச்சுடரேற்றல் மற்றும் மங்கள விளக்கேற்றலைத் தொடர்ந்து, தமிழீழத் தேசியக் கொடியை சோலை நகர் கிராம ஊரக வளர்ச்சிப் பொறுப்பாளர் பரந்தாமன் ஏற்றிவைத்தார். தமிழர் புனர்வாழ்வுக் கழகக்கொடியை தமிழர் புனர்வாழ்வுக்கழக சமுதாய மீள் கட்டமைப்புத் திட்டத்தின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் வி.நாகரூபன் ஏற்றிவைத்தார்.

கட்டடத்தின் பெயர்ப்பலகையை உதவி அரசாங்க அதிபர் சுலோஜினி திரைநீக்கம் செய்துவைத்தார்.

செயலகப் பொதுக் கட்டடத்தை வடக்கு - கிழக்கு மாகாண சமுதாய மீள் கட்டமைப்புத்திட்டத்தின் பிரதித் திட்டப் பணிப்பாளர் புவனேந்திரன் மற்றும் உதவி அரசாங்க அதிபர் ஆகியோரும் இணைந்து நாடாவை வெட்டித் திறந்து வைத்தனர்.

சமூகப் பொருளாதார அபிவிருத்திச் சங்கக் கட்டடத்தை, சமுதாய மீள் கட்டமைப்புத் திட்டத்தின் கிளிநொச்சி மாவட்ட பிரதித் திட்டப் பணிப்பாளர் குகதாசன் திறந்துவைத்தார்.

நூலகக் கட்டடத்தை புதுமுறிப்பு விக்கினேஸ்வரா வித்தியாலய அதிபர் சு.சிவனொளிபாதம் திறந்துவைத்தார்.

கிராம அலுவலகக் கட்டடத்தை சோலைநகர் கிராம சேவகர் சிவனேசன் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் - வரவேற்புரையைத் தொடர்ந்து, ஆசியுரையை கிராமசேவகர் சி.சிவனேசன் நிகழ்த்தினார். கருத்துக்களை உதவி அரசாங்க அதிபர், தமிழர் புனர்வாழ்வுக் கழக சமுதாய மீள்கட்டமைப்புத் திட்டப் பணிப்பாளர் சுடர், ஊரக வளர்ச்சிப் பொறுப்பாளர் பரந்தாமன் ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்தச் சிறப்புரையை பிரதித் திட்டப்பணிப்பாளர் புவனேந்திரன் நிகழ்த்தினார்.

நிகழ்வில் தொடர்ந்து கிராம மக்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் - தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பிரதிநிதிகள், பணியாளர்கள், சமுதாய மீள் கட்டமைப்புத் திட்டப் பிரதிநிதிகள், பணியாளர்கள், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பெருமளவானோர் கலந்துகொண்டனர்.

சோலைநகர் கிராமமானது கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ள கிராமங்களில் ஒன்றாகும். சமூகப் பொருளாதார ரீதியாக மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்பட்ட இந்தக் கிராமம் - நீண்டகாலமாகப் போர்ச் சூழ்நிலைகளால் மேலும் பல பின்னடைவுக்குள்ளானது.

இதனையடுத்து, தமிழர் புனர்வாழ்வுக் கழகம் கணிசமான நிதியை ஒதுக்கி ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதிப் பங்களிப்புடன், வடக்கு- கிழக்கு சமுதாய மீள் கட்டமைப்புத் திட்டத்தின் கீழ் போரால் பாதிக்கப்பட்ட பிரதேச மீள்புனரமைப்புத்திட்டத்துக்கமைய இந்தக் கட்டடம் நிறுவப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கான ஆலோசனைக் கூட்டம்

வவுனியா—

வவுனியா மாவட்ட உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்களின் ஆலோசனைக் கூட்டம் கடந்த வியாழக்கிழமை வவுனியா இந்து இளைஞர் அரங்கில் நடைபெற்றது.

வடக்கு - கிழக்கு தழிழர் தாயகத்தில் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை ஒத்திவைக்க வேண்டும் என்று பல்வேறு பொது அமைப்புக்கள் கேட்டுக் கொண்ட பிறகும் தேர்தல் ஆணையாளர் தேர்தலை நடத்த முடிவு செய்திருப்பதாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிசோர் தெரிவித்தார்.

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலுக்குத் தயாராகுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் இந்தக் கூட்டத்தில் வேண்டுகோள் விடுத்தார்.

முன்னதாக வவுனியா பொலிஸ் பொறுப்பதிகாரி எம். தென்னக்கோன் உள்ளிட்ட பொலிஸ் அதிகாரிகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்கள் சந்தித்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்களின் பிரசாரக் கூட்ட ஒழுங்குகள் தொடர்பாக இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதாக வவுனியா செய்திகள் தெரிவித்தன.

# புனர்வாழ்வு கழக பணியாளர்களை விடுவிக்ககோரி கண்டனப் பேரணி!

மன்னார்—

மட்டக்களப்பில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டுப் பிரிவுப் பணியாளர்கள் கடத்தப்பட்டு, இதுவரைகாலமும் விடுவிக்கப்படாததைக் கண்டித்தும், உடனடியாக விடுவிக்கவேண்டுமெனவும் கோரி மன்னார் மடு வலய முன்பள்ளிச் சிறார்களின் கண்டனப்பேரணி ஒன்று நேற்றுமுன்தினம் காலை 10 மணிக்கு நடைபெற்றது.

அடம்பன் மத்திய மகாவித்தியாலய முன்றலில் ஆரம்பமான இந்தப் பேரணி, மாந்தை மேற்கு உதவி அரசாங்க அதிபர், மன்னார் மறை மாவட்ட ஆயர், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு ஐக்கிய நாடுகள் அகதிகள் உயர்ஸ்தானிகராலயம், யுனிசெப் சிறுவர் பாதுகாப்பு நிதியம், மன்னார் மாவட்ட அரசியற்துறை ஆகியோருக்கான மகஜர்கள் மாந்தை மேற்கு உதவி அரசாங்க அதிபர் சி.சுதாகரிடம் - முன்பள்ளிச் சிறர்களால் கையளிக்கப்பட்டன.

இந்தப் பேரணியில் மடு வலயத்துக்குட்பட்ட 20 முன்பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள், தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணியாளர்கள், பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# குற்றச் செயல்களைத் தடுக்க வவுனியாவில் விழிப்புக்குழுக்கள்

வவுனியா—

வவுனியா மாவட்டத்தில் அண்மைக் காலத்தில் அதிகரித்துள்ள கொலைகள், கொள்ளைகள், கோஷ்டி மோதல்கள் மற்றும் ஆட்கடத்தல் போன்ற குற்றச் செயல்களைத் தடுக்கப் பிரதேச, கிராம மட்டங்களில் விழிப்புக் குழுக்களை அமைப்பதற்கு வவுனியா மாவட்ட நீதிபதி இளஞ்செழியன் நடவடிக்கை எடுத்துள்ளார்.

கடந்த புதன்கிழமை பி.ப 3 மணிக்கு வவுனியா மாவட்ட நீதிமன்றில் நீதிபதி இளஞ்செழியன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலேயே இதற்கான யோசனை முன்வைக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் நீதிபதி உரையாற்றுகையில் -2004 ஆம் ஆண்டுக்குப் பின்னர் குறைந்து காணப்பட்ட குற்றச் செயல்கள் அண்மைக்காலமாக அதிகரித்துள்ளதாகவும், குறிப்பாக இறம்பைக்குளம், பூந்தோட்டம், வேப்பம்குளம், குருமன்காடு ஆகிய சந்திகளில் குழு மோதல்கள் ஏற்படுவதற்கு சாத்தியம் அதிகரித்துள்ளதாகவும், ஹெரோயின் போதை மருந்து பாவித்தல், விற்பனை செய்தல் போன்ற குற்றங்கள் புரிபவர்களில் 95 வீதமானவர்கள் தேக்கவத்தைப் பகுதியில் உள்ளதாகவும், இது சம்பந்தமாக பொலிஸார் கூடிய கவனம் எடுக்க வேண்டும் என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் வவுனியா அரச அதிபர், பொலிஸ் அதிகாரிகள், சட்டத்தரணிகள், சங்கத் தலைவர் சிற்றம்பலம் மற்றும் கிராம சேவகர்கள் கலந்து கொண்டனர்.



வெற்றிலைக்கேணிப் பிரதேசத்தில் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கரித்தாஸ் - கியூடெக் நிறுவனத்தால் அமைக்கப்பட்டுவரும் நிரந்தர வீடமைப்புத் தொகுதியைப் படத்தில் காணலாம். (91)

# மாவீரர்கள் ஞாபகார்த்த தாச்சிப் போட்டிகள்!

இராமநாதபுரம்—

2 ஆம் லெப். நிரஞ்சன், 2 ஆம் லெப்.யாழினி, வீரவேங்கை டொமினிக் ஞாபகார்த்த தாச்சிப்போட்டி - கடந்த செவ்வாய்க்கிழமை தொடக்கம் வியாழக்கிழமை வரை இராமநாதபுரம் ஈகிள் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

கிளிநொச்சி கிழக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தைச் சேர்ந்த த.க. கண்ணன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் - பொதுச்சுடரை ஊரக மேம்பாட்டுக் குழுத்தலைவர் செல்வநாயகம், கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர் எஸ்.ஆர்.குமாரசாமி ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தமிழீழத் தேசியக் கொடியை ஜெயந்தன், படையணியின் தளபதிகளில் ஒருவரான த.மனோகரன் ஏற்றிவைத்தார். ஈகிள் விளையாட்டுக் கழகக் கொடியை விளையாட்டுக் கழகத் தலைவர்அ.காந்தராசா ஏற்றிவைத்தார். ஈகைச் சுடரை க.ரவிசங்கர் ஏற்றிவைத்தார்.

இந்த நிகழ்வில் 34 அணிகள் போட்டியிட்டன. கல்மடு செந்தாரகை விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வட்டக்கச்சி ஜொனி விளையாட்டுக் கழகமும், புளியம்பொக்கணை பி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து செல்வபுரம் சந்திரன் விளையாட்டுக் கழகமும், பன்னங்கண்டி சுடர்ஒளி அ விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து பாரதிபுரம் கிழக்கு ஆதவன் அணியும், வட்டக்கச்சி மணிவண்ணன் பி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து விசுவமடு மலரும் மொட்டுக்கள் பி விளையாட்டுக்கழகமும், பொன்நகர் கண்ணன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கிளிநொச்சி உதயதாரகை விளையாட்டுக்கழகமும், ஒளி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து இராமநாதபுரம் கிழக்கு ஆதவன் அணியும், வட்டக்கச்சி மணிவண்ணன் பி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து விசுவமடு மலரும் மொட்டுக்கள் பி விளையாட்டுக் கழகமும், பொன்நகர் கண்ணன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கிளிநொச்சி உதயதாரகை விளையாட்டுக் கழகமும், சம்புக்குள வான்நிலா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பாரதிபுரம் மாலதி விளையாட்டுக் கழகமும், கதிரவன் ஏ விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கோணாவில் ஒளிர்நிலா பி விளையாட்டுக்கழகமும் போட்டியிட்டன. (இ)

# முதுபெருங் கலைஞர் மதிப்பளிப்பும் நல்லாசான் விருது வழங்கலும்!

முல்லைத்தீவு—

தமிழீழ நுண்கலைப்பிரிவின் முள்ளியவளை நுண்கலைக்கல்லூரியின் 7 ஆவது ஆண்டு நிறைவு விழா இன்று நடைபெறவுள்ளது.

இந்த விழாவையொட்டி முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள முதுபெருங்கலைஞர்கள் 5 பேர் கௌரவிக்கப்படவுள்ளனர். தமிழ்மணி அரியான் பொய்கை செல்லத்துரை (இயற்துறை), கலைஞர் என்.எஸ். மணியம் (நாடகத்துறை), ஓவியகலா கேசரி சு.இராஜன் (ஓவியத்துறை), கானவித்தகி புவனா இரத்தினசிங்கம் (இசைத்துறை), இசைக்கலைமணி உதயராணி முனீஸ்வரன் (இசைத்துறை), தமது ஆசிரியப் பணியை மிக உச்சமாகச் செயற்படுத்திவரும் சங்கீதபூசணம் ச.பாலசிங்கம், இசைத்துறை இசைக்கலைமணி சாந்தகுமாரி கமலகாந்தன் (இசைத்துறை), ஆகிய இரண்டு ஆசான்களும் இந்த ஆண்டுக்கான நல்லாசான் விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர் என தமிழீழ நுண்கலைப் பிரிவு தணிகைமாறன் அறிவித்துள்ளார்.

# நேரடி உதவி வழங்க முடியவில்லை அவுஸ்ரேலிய அமைச்சர் கவலை!

மன்னார்—

எமது அரசாங்கத்தால் வழங்கப்படும் உதவிகளைச் சம்பந்தப்பட்ட பிரதேசங்களுக்கு நேரடியாகச் சென்று வழங்க முடியாததையிட்டு நாம் ஆழ்ந்த கவலையடைந்துள்ளோம் என அவுஸ்திரேலிய குடிவரவு பல் கலாசார விவகார அமைச்சர் எமண்டா லென்ஸ்டோன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தின் அபிவிருத்திப் பணிக்கென தமது அரசாங்கத்தால் வழங்கப்படும் நிதியின் பயன்பாடு எவ்வாறு இருக்கிறது என்பதை பார்வையிடுவதற்காக மன்னார் மாவட்டத்துக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்ட இவர் மன்னார் மாவட்ட செயலக வளாகத்தில் நடைபெற்ற பயனாளிகளுக்கு உபகரணங்கள் கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இங்கு வழங்கப்படும் உபகரணங்கள் பயனாளிகளின் வாழ்க்கைத் திறனை வளம்படுத்தும் என தாம் நம்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த நிகழ்வு மன்னார் மாவட்ட செயலகத்தில் கடந்த வியாழக்கிழமை அரச அதிபர் வே.விஸ்வலிங்கம் தலைமையில் நடைபெற்ற உயர் மட்ட சந்திப்பைத் தொடந்து செயலக வளாகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் கலந்துகொண்ட அவுஸ்ரேலிய அமைச்சர் எமண்டா லென்ஸ்டோன் இலங்கைக்கான அவுஸ்ரேலிய உயர் ஸ்தானிகர் கிரேக் பிரெஞ்ஸ் ஆகியோர், அவுஸ்ரேலிய அரசாங்கத்தின் 3.5 மில்லியன் ரூபா பெறுமதியான உபகரணங்களை கையளித்தனர்.

இந்த மீனவருக்கான படகுகள், வெளிஇணைப்பு இயந்திரங்கள், வலைகள் என்பனவும் மன்னார் மாவட்ட கடற்தொழில் திணைக்களத்துக்கென கணினித் தொகுதி, விவசாயிகளுக்கான விவசாய உபகரணங்கள் மற்றும் நீர்தாங்கியுடன் இணைந்த சிறிய உழவு இயந்திரம் என்பன வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (மோ)

நமது ஈழநாடு

சிந்தனைக்கு!
மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறம் சூழும் சூழ்ந்தவன் கேடு.
- திருக்குறள்

## நமது நோக்கு

# மோசமான பயங்கரவாதம்

யாழ்ப்பாணத்திலிருந்து 40 ஆயிரம் இராணுவத்தினரின் சவப்பெட்டிகள் வந்தால், கொழும்பிலுள்ள 4 லட்சம் தமிழர்களை கிளிநொச்சிக்கு சவப்பெட்டியில் அனுப்பிவைப்போம் என்று ஜாதிக ஹெல உறுமயவின் கொள்கை வகுப்பாளர் சம்பிக்க ரணவக்க எச்சரித்திருக்கிறார்.

இந்த எச்சரிக்கை எந்தளவுக்கு சிங்களப் பேரினவாதம் தமிழ் மக்களைத் தின்று தீர்க்கக் காத்திருக்கிறது என்பதற்கு மிகமிக நல்ல உதாரணம். அதுவும், இவரது பேட்டி சிங்கள, தமிழ் பத்திரிகைகளில் வெளிவந்திருந்தால் அமுங்கிப் போயிருக்கும்.

ஆங்கிலப் பத்திரிகைகளில் வெளியானதால் - இது சர்வதேச சமூகத்துக்கு சிங்களப் பேரினவாதத்தின் முகமூடியை இன்னொரு தடவை கிழித்தெறிய உதவியிருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் உள்ள படையினர் போரிடுவதற்கென்றே தயார்படுத்தப்பட்டவர்கள். அவர்கள் தம்மை எதிர்க்க வருவோருடன் சண்டையிட்டு மடிந்தால் - அதற்குப் பதிலாகக் கொழும்பிலுள்ள அப்பாவித் தமிழர்களை வேட்டையாடுவோம் என்று எச்சரிப்பது மிகவும் பேடித்தனமானது.

ஒன்றுக்குப் பத்தாக அப்பாவிகளைக் கொன்று தீர்ப்போம் என பகிரங்கமாகவே கூறும் அளவுக்கு இலங்கைத் தீவில் சிங்கள பௌத்த பேரினவாதம் கோலோச்சுகின்றது.

1983ஆம் ஆண்டு திருநெல்வேலி தாக்குதலில் கொல்லப்பட்ட 13 படையினரின் சடலங்களையும் கொழும்புக்குக் கொண்டுபோய் - அதை வைத்தே ஒரு இனக் கலவரத்தை உருவாக்கினார் ஜே.ஆர்.

1983 இனக்கலவரத்தின் மூலம் நூற்றுக்கணக்கான தமிழர்களைக் கொன்று, அவர்களின் சொத்துக்களைச் சூறையாடி, எரித்தழித்து அகதிகளாக அலையவிட்டதன் விளைவு - அதன் பின்னர் ஆயுதப்போராட்டம் கூர்மையடைய வழிவிட்டது.

எனவே, சம்பிக்க ரணவக்க போன்றவர்கள் 4 லட்சம் தமிழர்களை கொழும்பில் படுகொலை செய்தால் விளைவுகள் எத்தனை விபரீதமாக இருக்கும் என்பதையும் அவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

இனப்படுகொலைகளின் மூலம் 1958, 1977, 1983 எனத் தமிழர்களை அடக்கிஆள எத்தனித்ததன் விளைவால்தான் - 40ஆயிரம் சிங்களப் படைகளின் சவப்பெட்டிகள் கொழும்புக்கு வந்து விடுமோ என்று ஒவ்வொரு நாளும் அச்சத்துடன் இருக்க வேண்டியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டுள்ள 40 ஆயிரம் படையினரதும் உயிருக்கு உத்தரவாதம் இல்லாத - முற்றிலும் இராணுவரீதியில் சாதகமற்றதொரு இடத்தில் வைத்திருக்கிறது இலங்கை அரசு.

ஆனால், குடாநாட்டைவிட்டு இவர்களை வெளியேற்ற இவர்களின் கௌரவம் இடம் கொடுக்கவில்லை. இதனால் தென்னிலங்கைச் சிங்கள மக்களின் 40 ஆயிரம் வீடுகளும் தினமும் ஏக்கத்துடன் தான் சீவியம் நடத்துகின்றன.


அப்பாவிச் சிங்கள இளைஞர்களின் வறுமையைச் சாதகமாக்கி, இவர்களுக்கு இனவாதக் கருத்துக்களை ஊட்டிவிட்டு, தமிழர்களுக்கு எதிராகச் செயற்பட வைப்பதில் அரசாங்கம் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது.

இராணுவரீதியாக சாதகமற்றதொரு கொலைக்களத் துக்குள் 40 ஆயிரம் இராணுவத்தினரை நவீன போர்த் தளபாடங்களுடன் கொண்டுவந்து குவித்துவிட்டு - அவர்கள் கொல்லப்பட்டால் 4 லட்சம் தமிழர்களைச் சவப்பெட்டியில் அனுப்புவோம் என்று கூறுவது உலகில் மிக மோசமான பயங்கரவாதமாகும்.

சர்வதேசம் சிங்கள பௌத்த பேரினவாத பயங்கரவாதத்தை இனிமேலாவது புரிந்துகொள்ள வேண்டும். அதேவேளை - 1958, 1977, 1983 ஆண்டுகளைப் போன்று இனியும் தமிழர்களை இனப்படுகொலை செய்து கோரப்பசியாறலாம் என எந்தவொரு சிங்களப் பேரினவாத சக்தியும் கனவு காணக்கூடாது.

ஏனென்றால், அப்படி அவர்கள் செய்வதன் மூலம் சர்வதேச சமூகத்தின் ஒட்டுமொத்தமான பகைமையை சம்பாதிப்பது ஒருபுறம் இருக்க, தமிழினம் அதைக் கைகட்டிப் பார்த்துக் கொண்டிருக்க மாட்டாது என்பதையும் சிங்கள இனவாதிகள் புரிந்து கொள்ள வேண்டும்.

267, Navalar Road,
Jaffna.
T.P.021-2225107
Fax - 021 - 2223922
Web - www.eezhanaadu.com
email-eezhanaadu @ yahoo.com




# விடுதலைப் போருக்குப் பணம் திரட்டுவது இன்றுதான் நடக்கும் நிகழ்வல்ல!

## ஊர்சுற்றியார் பார்வையில்

ஜெனிவா மாநாட்டில் ஒப்புக்கொள்ளப்பட்டபடி அரச படைகளுக்கு உதவியாகச் செயற்படும் துணைப்படைகளான ஆயுதக் குழுக்களிடமிருந்து ஆயுதங்கள் களையப்படவேண்டும். ஆனால், இந்த ஆயுதங்களைக் களையவேண்டிய பொறுப்பிலுள்ள பொலிஸ்மா அதிபர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் போன்றவர்கள் புலிகளின் ஆயுதங்கள் பற்றி இப்போது பேசத் தொடங்கியிருக்கிறார்கள்.

ஜெனிவா மாநாட்டிலேயே - அதில் கலந்துகொண்ட பொலிஸ்மா அதிபர் புலிகளின் ஆயுதங்கள் பற்றிக் கேட்டிருக்க வேண்டும். இப்பொழுது கொழும்பில் இதுபற்றிப் பேசுவதென்றால் துணைப் படைகளின் ஆயுதங்களைப் பறிப்பதற்கு அவர் தயாராக இல்லை என்பதே அர்த்தம். இதுமட்டுமல்ல, இப்பொழுது அரசாங்க அதிகாரிகளும் கூட அரசியல்வாதிகளாகப் பேசவும், நடக்கவும் தொடங்கியிருக்கின்றனர்.

இதுமட்டுமல்ல, ஜெனிவாவிலிருந்து திரும்பியவர்கள் அந்த மாநாட்டின் நோக்கத்துக்கும், அது வெளிப்படுத்திய உணர்வுகளுக்கும் எதிராகவே பேசியும், நடந்தும் வருகிறார்கள் என்று மனவேதனையுடன் பரதேசியார் சொன்னார்.

ஜெனிவா போனவர்களை விடும். இங்குள்ள அரசியல்வாதிகள், அரசாங்க அதிகாரிகள், ஊடகவியலாளர்கள் எப்படி நடந்து கொள்கிறார்கள். ஜெனிவாவிலிருந்து விடுதலைப் புலிகள் எந்தெந்த நாடுகளில் பணம் திரட்டுகிறார்கள், எப்படியெப்படியெல்லாம் மிரட்டிப் பணம் பறிக்கிறார்கள் என்றெல்லாம் ஊடகங்கள் செய்திகள் வெளியிடுகின்றன. விடுதலைப் புலிகள் இலங்கையில் மட்டுமல்ல உலகில் எந்த மூலையிலுமே செயற்படக்கூடாதென்பது இந்த ஊடகங்களின் பிரசாரம்.

கனடாவில் ஆட்சி மாற்றம் வந்து புதிய பிரதமர் பதவியேற்றிருக்கிறார். விடுதலைப் புலிகளைக் கனடா தடைசெய்ய வேண்டுமென்று அங்குள்ள பத்திரிகைகள் இரண்டு கோரியிருப்பதாக இங்குள்ள ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருக்கின்றன. முன்னர் கனடாப் பத்திரிகைகளை புலிகளுக்கு எதிராகத் தூண்டிவிடுவதில் கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கில, சிங்களத் தினசரிகள் தீவிரமாகச் செயற்பட்டன. இப்பொழுது மீண்டும் புலி எதிர்ப்புப் பிரசாரம் ஜெனிவா மாநாட்டின் பின்னர் தீவிரமாக்கப்பட்டிருக்கிறது.

1956ஆம் ஆண்டின் பின் இருந்த நிலைமை ஏற்படுகிறது. சம்பிக்க ரணவக்கவின் பேச்சு பழைய கலகத்தை நினைவுபடுத்துகிறது. இன்று உருவாகிவரும் நிலைமையைப் பார்த்தால் நாட்டில் சமாதானம் ஏற்படுவதற்குப் பதிலாகப் போரின் மூலம் முடிவு காண்பதற்கு சிங்களப் பேரினவாதிகள் முனைவதாகத் தோன்றுகிறது என்று நான் சொன்னேன்.

ஜெனிவா மாநாட்டின் பின் புலி எதிர்ப்புப் பிரசாரம் அரச தரப்பிலிருந்து மட்டுமல்ல - சகல தரப்புகளிலுமே பேரினவாதிகளால் முடுக்கி விடப்பட்டிருக்கிறது.

புலிகள் சட்டவிரோதமாக வெளிநாடுகளில் பணம் திரட்டுகிறார்கள். சட்டவிரோதமாக ஆயுதங்கள் கடத்துகிறார்கள். சட்டவிரோதமாகச் சிறுவர்களைப் படைகளில் சேர்ப்பதற்காகக் கடத்துகிறார்கள் என்ற பிரசாரம் தீவிரப்படுத்தப்பட்டிருக்கிறது. நீர் சொல்வது சரிதான். போருக்குத்தான் எத்தனிக்கிறார்கள். ஆனாலும், போர்ப்பழியைப் புலிகள் மீது சுமத்துவதற்கு வழி செய்கிறார்கள். இது மட்டுமல்ல - எழுபதாயிரம் வீரர்கள் அதாவது, ஆயுதப்படைகளில் சேர்ந்து அங்கு தேசபக்தியுடன் நாட்டுக்குச் சேவைசெய்ய முடியாமல் அவற்றை விட்டு ஓடிச்சென்ற வீரர்களையும் கள்ளத்தனமாகச் சந்தையில் கிடைப்பதாக ஒரு செய்தி தெரிவித்தபடி பெருந்தொகை ஆயுதங்களும் பயன்படும் என்று சம்பிக்க ரணவக்க போன்றவர்களும் ஜே. வி.பியினரும் கருதுகிறார்களோ, என்னவோ என்று பரதேசியார் மேலும் சொன்னார். புலி எதிர்ப்புப் பிரசாரம் போகும் போக்கைப் பார்த்தால் சமாதானம் வராது என்றே தோன்றுகிறது.

வெளிநாடுகளில் பணம் திரட்டுகிறார்கள் என்று இப்போது சிங்களப் பேரினவாதிகள் கூச்சலிடுகிறார்களே. விடுதலைக்காகப் போராடிய இயக்கங்கள் பலவும் வெளிநாடுகளில் வாழ்ந்த தமது நாட்டு மக்களிடமிருந்து பணம் மட்டுமல்ல சகல உதவிகளையும் பெறவில்லையா? இந்தியாவை வெள்ளையரின் ஆட்சியிலிருந்து விடுவிப்பதற்காக மகாத்மா காந்தி தலைமையில் நடந்த சாத்வீகப் போராட்டத்தால் வெற்றி கிட்டாதென்று நினைத்த நேதாஜி வெளிநாடுகளிலிருந்த இந்தியர்களிடமிருந்து பணம் மற்றும் உதவிகளைப் பெற்றது மல்லாமல், வெளிநாடுகளில் வசித்த இந்தியர்களையும் தமது தேசிய இராணுவத்தில் சேர்த்துக்கொண்டார்.

பலஸ்தீனர்களுடைய பூமியில் ஆக்கிரமித்து இஸ்ரேலியர்கள் தமக்கென ஒருநாட்டை அமைத்த போது அமெரிக்காவிலும், வெளிநாடுகளிலும் வாழ்ந்த யூதர்கள் தங்கள் உழைப்பால் கிடைத்த சொத்துக்களை வழங்கவில்லையா? எந்தச் சமூகம் தங்கள் நாடு விடுதலை பெறுவதற்காக வெளிநாடுகளில் தாங்கள் ஈட்டிய பொருளைக் கொடுத்து உதவாமலிருந்தது.

இஸ்ரேல் நாட்டுக்கு எதிராக உலகில் ஒரு யூதனாவது, ஒரு இஸ்ரேலியனாவது கருத்துத் தெரிவித்திருக்கிறானா? பலஸ்தீன விடுதலைக்கெதிராக எந்தவொரு இஸ்லாமியனாவது உலகில் எந்தவொரு மூலையிலாவது எதிர்த்துக் குரல் கொடுத்திருப்பானா? ஆனால், ஈழத்தமிழர்களில் சிலர்தான் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் எதிர்ப்புக் குரல் கொடுக்கிறார்கள்.

இவர்கள் ஜனநாயகம் பற்றிப்பேசுகிறார்கள். நாங்கள் ஜனநாயகத்தை நம்பித்தானே வாழ்ந்தோம். ஜனநாயக முறையில்தானே உரிமைகளைக் கேட்டோம்.

எங்களுக்கு ஜனநாயக முறையில்தானா பதில் சொன்னார்கள். எங்களை அழித்தபோது இந்த ஜனநாயகம் பேசுபவர்கள் என்ன செய்தார்கள்? நாம் ஆயுதம் ஏந்தாமலிருந்திருந்தால் ஜனநாயகத்தின் பெயரால் எமது இனமே அழிக்கப்பட்டிருக்கும் என்று பரதேசியார் மேலும் சொல்லிக் கொண்டு புறப்பட்டார்.

# இ.போ.ச பஸ்சேவை நேரம் சற்று நீடிக்கட்டுமே!

## வாசகர் நோக்கு

யாழ் . நகரிலிருந்து தெல்லிப்பழைக்குச் செல்லும் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் 768 ஆம் இலக்க கடைசி பஸ் - இரவு 8 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டுச்செல்லும் போது அரச, தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களாகிய நாங்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகிறோம். எனவே, இந்த பஸ் சேவையை இரவு 8.15 மணிவரை நீடிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

யாழ்ப்பாணத்தில் அசாதாரண சூழ்நிலை தோன்றுவதற்கு முன்பு கடைசி பஸ் 8.15 மணிக்கே யாழ்.பஸ் நிலையத்திலிருந்து புறப்பட்டது. இருப்பினும், தற்போது இந்த பஸ் 8 மணிக்குப் புறப்பட்டு வருவதால் வேலை முடிந்து வரும் நாம் பஸ்ஸை தவற விடவேண்டி ஏற்படுகிறது.

அத்துடன், யாழ்.பஸ்நிலையத்தில் இருந்து புறப்படும் இந்த பஸ் மிகக்குறைவான நேரத்தில் மிகவேகமாகச் செல்கிறது. எனவே, 8 மணிக்குப் புறப்படும் பஸ் என நினைத்து நாம் இடை யில் நின்று ஏறுவதற்குச் செல்லும்போது பஸ் வேகமாகப் போய்விடுகிறது.

ஆகவே, எமது சிரமங்களைக் கருத்தில் கொண்டு இந்த பஸ் சேவையை முன்புபோல் 8.15 மணிவரை நீடிக்குமாறு யாழ்ப்பாணம் போக்குவரத்துச்சபை அதிகாரிகளைக் கேட்டுக்கொள்கிறோம்.

சுன்னாகம் க.மயூரன்

# இந்திய, அமெரிக்க வல்லரசுகளின் விசனத்துக்குள்ளாகும் இலங்கை அரசு

ஜெனிவாவில் நடைபெற்ற பேச்சுக்களை முடித்துக்கொண்டு, அரச தரப்புக்குழு நாடு திரும்ப முன்னரேயே - கூட்டுப்படைகளின் தளபதி அட்மிரல் தயா சந்தகிரி தலைமையிலான பாதுகாப்பு அதிகாரிகள் குழுவொன்று ஆயுதக் கொள்வனவுக்காக பாகிஸ்தான் சென்றிருந்தது. அத்தோடு இந்த மாத இறுதியில் பாகிஸ்தானுடன் பாதுகாப்பு ஒத்துழைப்பு நடவடிக்கையை மேற்கொள்வதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் பாகிஸ்தான் விரையவுள்ளார்.

அண்மையில் பாதுகாப்பு அமைச்சின் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவும் முப்படைகளுக்கான ஆயுதங்களைக் கொள்வனவு செய்வது குறித்து சீன அரசாங்கத்துடன் பேச்சு நடத்தச் சென்றிருந்தார். இவையெல்லாம் அரசாங்கம் பேச்சுவார்த்தைக் காலத்தை - ஆயுதங்களைக்

பாகிஸ்தான் போர்க்கப்பல் "ஷாஜகான்"



கொள்வனவு செய்து தமது படைக்கட்டு மானத்தை விஸ்தரிக்கப் பயன்படுத்தும் காலமாகவே பயன்படுத்திக் கொள்ளப் பார்க்கிறது என்பதில் சந்தேகமில்லை.

ஆனாலும் இங்கு அதுவல்ல விடயம். இலங்கை அரசு சீன - பாகிஸ்தான் அரசுகள் பக்கம் சாய்ந்திருப்பது இந்திய அரசுக்கு ஒரு வகையில் அதிருப்தியை உண்டு பண்ணும் என்பதிலும் சந்தேகத்துக்கு இடமில்லை.

இந்தியாவுடன் மேற்கொள்ளவிருந்த பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்பாடு தற்போதைக்கு சாத்தியப்படாது என்று முடிவுகட்டிய நிலையில்தான் இலங்கை அரசு - இந்திய அரசுக்கு வெறுப்பை உண்டு பண்ணும் வகையில் ஆசியாவின் இதர நாடுகளுடன் கைகோர்த்திருக்கலாம்.

இருப்பினும் தெற்காசியாவில் இந்திய வல்லரசின் எதிர்ப்பைச் சம்பாதித்துக் கொண்டு வாழ்தல் என்பது இயலாத காரியமே. அதனால் இந்திய அரசுடனான தொடர்புகளை முற்றுமுழுதாக இலங்கை அரசால் கத்தரித்துக் கொள்ளமுடியாது. இராணுவ ரீதியிலான ஒத்துழைப்பைப் பெறமுடியாது போனாலும் - சமாதானப் பேச்சுக்களுக்கு இந்திய அரசின் ஆதரவை தொடர்ச்சியாகப் பெற்றுக்கொள்வதைத் தவிர்க்க முடியா தென்பதை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உணர்ந்தே இருக்கிறார்.

அதனால்தான் ஜெனிவாவில் நடைபெற்ற முதல் சுற்றுப் பேச்சுக்களினதும், அடுத்த மாதம் இடம்பெற விருக்கும் இரண்டாம் சுற்றுப் பேச்சுக் களினதும் விபரங்களை இந்திய அரசுக்குத் தெரிவிப்பதற்காக அரச தரப்பு பேச்சுவார்த்தைக் குழுவின் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா தலைமையிலான குழுவை அனுப்பத் தீர்மானித்துள்ளார் மகிந்த. இந்தச் செயற்பாடானது இந்திய அரசை ஆற்றுப் படுத்தும் ஒரு நோக்கிலேயே அமைந்துள்ளதென்றால் அது மிகையில்லை.

குறிப்பாக ஆசியப் பிராந்தியத்தில் வல்லரசான இந்தியாவின் கடும் போட்டியாளராக சீனா தலையெடுத்துவரும் இந்தத் தருணத்தில் இலங்கை அரசு சீனாவுடன் பாதுகாப்பு ஒத்துழைப்பு நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளமை பலத்த சந்தேகங்களை கிளறுவதாகவே உள்ளது.

இலங்கை அரசாங்கம் சீனாவின் பக்கம் சாய்வதற்கு இன்னொரு காரணத்தையும் சுட்டிக்காட்டலாம். ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பதவியை எப்படி யாவது கைப்பற்றி விட கடும் பிரயத்தனத்தை மேற்கொண்டு வரும் இலங்கை அரசு - இந்தப் பதவிக்கான வேட்பாளராக ஜயந்த தனபாலவை கடந்த ஆண்டே பரிந்துரை செய்திருந்தது.

அந்த[illegible]கையில் ஐக்கிய நாடுகள் சபையில் 'வீட்டோ' அதிகாரமுள்ள சீனாவின் ஆதரவைப் பெற்று எப்படியாவது இந்தப் பதவியைக் கைப்பற்ற இலங்கை அரசு எத்தனித்துக் கொண்டே இருக்கும்.

எனவே, இதன் அடிப்படையில் இலங்கை அரசு சீனாவின் பக்கம் சாய்ந்திருக்கலாம். அவ்வாறே 'வீட்டோ' அதிகாரமுள்ள அமெரிக்காவின் ஆதரவும் தமக்குக் கிடைக்கலாமென்று இலங்கை அரசு காத்திருந்தது.

ஆனாலும் சுமார் ஒரு வாரத்துக்குக்கு முன்னர் அமெரிக்கா ஐ.நா செயலகம் குறித்து சூசகமாக வெளியிட்ட அறி விப்பு இல ங்கையின் ஐ.நாசெயலர் பதவிக்கான நம்பிக்கையில் மண்ணை அள்ளிப்போட்டுள்ளது.

இதற்கு முன்னரும் ஐ.நா.செயலருக்கான பொறுப்பை ஆசியப்பிராந்தியம் வகித்துள்ளதால், இந்த முறை கிழக்கு ஐரோப்பிய நாட்டு பிரதிநிதி ஒருவருக்கு வழங்கினால் என்ன என்ற சாரப்பட அமெரிக்கா கருத்து வெளியிட்டு கையை விரித்துள்ளது.


அமெரிக்காவின் இந்தக் கைவிரிப்பு செயலானது அமெரிக்காவின் ஈராக்கிய படையெடுப்புக்கு மிகவும் ஆதரவளித்த போலந்து நாட்டின் முன்னாள் ஜனாதிபதியை இந்தப் பதவிக்கு முன்னிறுத்தக் கூடும் என்று கருதப்பட்டாலும் - இலங்கை அரசின் செயற்பாடுகளில் ஏற்பட்ட திருப்தியின்மை காரணமாகவே அமெரிக்கா கிழக்கு ஐரோப்பா நோக்கி தனது பார்வையை திருப்பிவிட்டுள்ளதோ எனவும் கருதத்தோன்றுகிறது.

அண்மையில் இலங்கையில் தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணியாளர்கள் கடத்தப்பட்டமை, 2005 ஆம் ஆண்டு இலங்கை மனித உரிமைகள் தொடர்பாக அமெரிக்க ராஜாங்கத் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கை என்பன இலங்கை அரசின் செயற்பாடுகளை உவப்பான வையா கக் காட்டிக் கொள்ளவில்லை. ஆகவே, இந்த வகை செயற்பாடுகளால் கூட இலங்கைக்கு ஐ.நா செயலர் பதவி கிடைப்பதற்கான ஆதரவை அமெரிக்கா விலக்கிக் கொண்டிருக்கலாம்.

எனவே, 'மத்தளத்துக்கு இரண்டு பக்கமும் இடி' என்பது போல இலங்கை அரசுக்கு ஒரு புறம் தெற்காசியாவில் இந்திய வல்லரசாலும் மறு புறம் அமெரிக்க வல்லரசாலும் பலத்த நெருக்கடிகள் தோன்றும் நிலை உருவாகும் என்பது தவிர்க்க முடியாது.

**அபிமன்யு**

# இணங்கியதைச் செயற்படுத்த அரசாங்கம் தவறினால் ..?



அரசாங்கத்துக்கும் - விடுதலைப் புலிகளுக்குமிடையே ஜெனிவாவில் நடைபெற்று முடிந்த முதல் சுற்றுப் பேச்சுவார்த்தையின் இறுதியில் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில், அடுத்த சுற்றுப் பேச்சுக்கள் நடைபெறவுள்ள ஏப்ரல் 19 ஆம் திகதிக்கு முன்னதாக வடக்கு - கிழக்கில் இயங்குகின்ற துணை இராணுவக் குழுக்கள் வெளியேற்றப்பட வேண்டுமென இணக்கம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதிலும் பேச்சு மேசையில் துணை இராணுவக் குழுக்களே இல்லையென அரச தரப்பு வாதாடியபோது, துணை இராணுவக் குழுக்களின் பொறுப்பாளர்கள், அவர்களை இயக்கும் இராணுவ அதிகாரிகள், அவர்களது தொலைபேசி இலக்கங்கள் போன்றவற்றை விடுதலைப் புலிகள் ஆதாரபூர்வமாக, அரச தரப்பிடம் கையளித்த வேளை, இதற்கு மேல் தாம் எதனைக் கதைப்பது என்ற நிலையில் வாயடைத்த அரச தரப்பினர், துணை இராணுவக் குழுவை வெளியேற்றுவதற்கு உடன்பட்டே கூட்டறிக்கையை சர்வதேசத்தின் அனுசரணையுடன் வெளியிட்டனர்.

இதன் பின்னர் நடந்த சம்பவங்கள் மிகவும் பாரதூரமானவை. துணைப்படையினரின் தாக்குதலால் மட்டக்களப்பு மாவட்டத்தில் மூன்று போராளிகள் உயிரிழந்ததாகவும், வாகரை கட்டுமுறிவில் தமது நிலைகளைத் தாக்க முயன்ற துணை இராணுவக் குழுக்களின் முயற்சி முறியடிக்கப்பட்டதாகவும் விடுதலைப் புலிகள் குற்றம் சாட்ட,

விடுதலைப் புலிகளின் நிலைகள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் ஜெனிவாவில் காணப்பட்ட இணக்கத்தை மீறும் செயலெனவும், இத்தகைய தாக்குதல்கள் தொடருமானால் அடுத்த கட்டப் பேச்சுகள் கேள்விக்குறியாகிவிடுமெனவும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு தனது கடுமையான கண்டனத்தைத் தெரிவித்தது.

இவ்வாறு பல தரப்பட்ட சம்பவங்கள் நடைபெற்றபோதிலும், அதனை இலங்கை அரசாங்கம் காதில் வாங்கிக் கொண்டதாகவோ அல்லது இவற்றுக்கெதிராக நடவடிக்கை ஏதும் எடுத்ததாகவோ தெரியவில்லை.

இ[illegible]த நிலையிலேயே, கடந்த வருட இலங்கை மனித உரிமைகள் நிலைமை தொடர்பாக அமெரிக்க இராஜாங்கத் திணைக் களம் வெளி யிட்ட அறிக்கையில், ஈ.பி.டி.பி, புளொட், கருணாகுழு என்பன இலங்கை அரசாங்கத்தின் துணை ஆயுதக் குழுக்களாகச் செயற்படுவதாகவும், இவர்களால் பெருமளவு மனித உரி மைகள் மீறப்படுவதாகவும் தெரிவித்துள்ளது.

இலங்கை அரசாங்கம், இதுவரை காலமும் இராணுவத்துடன் இணைந்து துணை இராணுவக் குழுக்கள் எவையும் இல்லையெனக் கூறி வந்த வேளை, அமெரிக்கா இவ்வாறு தெரிவித்துள்ளமை, விடுதலைப் புலிகள் சமர்ப்பித்த ஆதாரபூர்வமான ஆவணத்துக்கு மேலும் வலுச்சேர்க்கும் விதமாகவே அமைந்துள்ளது.

இந்த நிலையில் ஜெனிவாப் பேச்சுகளில் விடுதலைப் புலிகளின் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தின் வாதங்களுக்கு ஈடுகொடுக்க முடியாமல் பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ, திணறியதாக ஊடகங்களில் செய்தி வெளியாகியிருந்தது. இவர் தற்பொழுது என்ன கூறுகின்றாரென்றால் - விசேட அதிரடிப்படை மட்டுமே துணை இராணுவக் குழுவெனவும், சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட ஒரு குழுவே துணை இராணுவக் குழுவெனவும், அரசியல் வாதிகள் போலக் கருத்து தெரிவித்துள்ளார்.

சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டும் பொலிஸ் மா அதிபரின், கூற்று நகைப்புக்கிடமானது. போதைவஸ்து வியாபாரிகளுடன், சில உயர் வரிசைப் பொலிஸாருக்கும் தொடர்பிருப்பதாகக் கூறியுள்ள பொலிஸ் மா அதிபர், அவர்களைக் கண்டுபிடிக்க முடியாமல் தவிக்கின்ற நிலையில், துணை இராணுவக் குழுக்கள் இயங்குகின்றன என்று கூறினால் அவர்களையும் கண்டுபிடிக்க வேண்டிய மேலுமொரு பாரம் தலையில் ஏறிவிடுமோ என நினைத்து இவ்வாறு கூறினாரோ தெரியவில்லை.

இவர்தான் இவ்வாறு கூறினாரென்றால், வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர லண்டனில் வைத்து பி.பி.சி தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் வடக்கு - கிழக்கிலுள்ள துணை இராணுவக்குழுக்களுக்கும், அரசாங்கத்துக்கும் தொடர்பில்லையெனக் கூறியுள்ளார். அத்துடன் இந்த ஆயுதக்குழுக்கள் எவருடன் தொடர்புடையவர்கள் என்பதிலும் தமக்குச் சந்தேகம் நிலவுவதாகவும் தெரிவித்துள்ளார்.

அவ்வாறெனில், விடுதலைப் புலிகளும், அமெரிக்காவும் தெரிவித்த துணை ஆயுதக் குழுக்களான கருணாகுழு, புளொட், ஈ.பி.டி.பி என்பன எங்கிருந்து செயற்படுகின்றன என்பதனை மறைப்பதற்கு அரசாங்கம் ஏன் இவ்வளவு பகீரத பிரயத்தனம் எடுக்க வேண்டும்.

வெளியுறவு அமைச்சர் சமரவீரவின் கருத்துக்கு சாட்டையடி கொடுப்பது போலவே கண்காணிப்புக்குழு தனது கருத்தைத் தெரிவித்துள்ளது. அதாவது இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் துணை ஆயுதக் குழுக்களின் செயற்பாடு உறுதி செய்யப்பட்டிருக்கிறது எனத் தெரிவித்துள்ளது.

விடுதலைப்புலிகள் முன்னரங்க நிலைகளில் பதுங்கு குழிகளை அமைத்து வருகின்றனர், ஆயுதங்களுடன் நடமாடித் திரிகின்றனர் என துல்லியமாக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நடக்கும் சம்பவங்களைக் கண்காணிப்புக்குழுவிடம் முறையிடும் இராணுவம், தம்முடன் துணை இராணுவக் குழுக்கள் செயற்படவில்லையென்றால், தமது கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இயங்கும் அவர்களைக் கைது செய்வதற்கு ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்ற கேள்வி இயல்பாக எழுகின்றது.

அண்மையில் கூட, வெலிக்கந்தையில் வைத்து கருணாகுழுவின் அரசியல் பொறுப்பாளர் தூயவன் என தன்னை இனம்காட்டிய ஒருவர் சிங்கள நாளிதழுக்கு அளித்த பேட்டியில் தாம் ஆயுதங்களைக் கைவிடப் போவதில்லையெனவும், தமது சொந்த ஆயுதங்களையே தாம் வைத்திருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

வெலிக்கந்தை - இராணுவத்தின் பூரண கட்டுப்பாட்டிலுள்ள ஒரு பகுதியாகும். இங்கு சிங்கள நாளிதழ் ஒன்றின் செய்தியாளர் கருணா குழுவுடன் தொடர்புகொண்டு சுதந்திரமாக பேட்டி எடுத்துள்ளார். அவ்வாறெனில் தமது கட்டுப்பாட்டின் கீழ் இந்தக் குழுக்கள் இல்லையெனக் கூறும் இராணுவம் இதற்கு என்ன சொல்லப் போகின்றது?

இதனைவிட கருணாகுழுவிலிருந்து தப்பி வந்து விடுதலைப் புலிகளிடம் சரணடைந்தவர்கள் 15 வயதுக்குட்பட்டவர்களாகவும், அதற்கு மேற்பட்டவர்களாகவும் இருந்ததுடன் அவர்கள் ஊடகவியலாளர்களி டம் கருணா குழுவின் செயற்பாடுகள் தொடர்பாகக் கூறிய அனைத்தும் பொய்யென்றா கொள்ள வேண்டும். தீவுச்சேனையில் கருணா குழுவின் முகாம் உள்ளதாகவும், இதற்கு 200 இரா ணுவத்தினர்பாதுகாப்பு அளிப்பதாகவும் இவர் கள் ஆதாரபூர்வமாக தெரிவித்ததை ஏன் அரசாங்கமும், அதன் இராணுவமும் தொடர்ந்தும் மறுக்கின்றன. சர்வதேசத்துக்கே தெரிந்த இந்த விடயத்தை இலங்கை அரசு மறுப்பதன் மூலம் தனது நற்பெயரை காப்பாற்றிக் கொள்ளலாமென நினைத்தால் அதைவிட முட்டாள்தனமான செயற்பாடு வேறு எதுவாக இருக்க முடியும்.



இந்த வேளை விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் விடுத்துள்ள எச்சரிக்கையே அடுத்த சுற்றுப் பேச்சுத் தொடர்பான நிலைமையை தீர்மானிக்கவுள்ளது. அதாவது முதற்கட்டப் பேச்சுக்களில் இணக்கம் காணப்பட்டவற்றை செயற்படுத்த அரசாங்கம் தவறினால், அடுத்த கட்டப் பேச்சுத் தொடர்பான முடிவை மீளாய்வு செய்ய நேரிடுமென்ற அவரது எச்சரிக்கை விடுதலைப் புலிகளால் வெறும் பேச்சுக்கு மட்டும் விடுக்கப்பட்டதல்ல என்பதனை அரசாங்கம் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

**கரன்**

# வரணிப் பகுதியில் சட்டவிரோத மண் அகழ்வு அதிகரிப்பு!

தென்மராட்சி—

வரணிப் பகுதியில் சட்டவிரோத மண் அகழ்வு அதிகரித்துவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வரணிப் பகுதியில் வயல் நிலங்களில் இரவு நேரங்களில் உழவு இயந்திரம், கன்ரர் வாகனங்களில் வருவோர் இவ்வாறு மண் அகழ்வில் ஈடுபட்டுவருவதாகவும்-

இதனால் வயல் வரம்புகள் வெட்டப்பட்டுக் கிடங்குகள் உருவாகிவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வயல் நிலங்கள் இவ்வாறு தாழ்வுப் பிரதேசமாக மாறிவருவதால் அருகிலுள்ள கடல் நீரேரி உவர்நீர் வயல் நிலங்களுக்குள் புகுந்து உவர் நிலமாக மாறக்கூடிய அபாயம் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே இந்த சட்டவிரோத மணல் அகழ்வை சம்பந்தப்பட்டவர்கள் தடுத்துநிறுத்தவேண்டுமென அந்தப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (து)




சுன்னாகத்தில்...
எரிக்கணேஸ் ஸ்தாபனத்தாரின் 5 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு விசேடவிலைக்கழிவில்
- இலவசமாக கண்களைப் பரிசோதித்து தரமான மூக்குக் கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ளவும்
- இழந்த பற்களுக்கு நிகரான சங்குப் பற்களை உங்கள் முகப் பொலிவிற்கேற்ப கட்டிக்கொள்ளவும்
- மிதப்பு பற்களுக்கு நவீனமுறையில் கிளிப் பொருத்திக் கொள்ளவும்
இன்றே நாடுங்கள்
எரிக்கணேஸ் பல்மூக்குக் கண்ணாடியகம்.
86, K.K.S வீதி, சுன்னாகம்.
தலைமை நிறுவனம் : 566, ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம். TP : 222 2486
கிளை நிறுவனம் : 91, K.K.S வீதி, கொக்குவில். TP : 222 5233
[C/5160]


## மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம்—

யாழ்.லயன்ஸ் கழக அனுசரணையுடன் - சொண்ட் நிறுவனத்தின் ஏற்பாட்டில் பண்டத்தரிப்பு, பெரியவிளான், சில்லாலை ஆகிய கிராமங்களை உள்ளடக்கி மாபெரும் மருத்துவ முகாம் இன்று காலை 11 மணி முதல் மாலை 3 மணிவரை பண்டத்தரிப்பு பத்திமா தேவாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்த மருத்துவ முகாமில் இரத்த அழுத்தம், நீரிழிவு கண் பரிசோதனை செய்து கண்ணாடி வழங்கல் என்பவற்றுடன் - சுகாதார விழிப்புணர்வுக் கருத்தரங்குகளும் இடம் பெறவுள்ளது. இதில் அனைவரையும் கலந்து பயன்பெறுமாறு யாழ். லயன்ஸ் கழகத் தலைவர் றஞ்சன் தெரிவித்தார்.

## வர்த்தகர்களுக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்—

யாழ்ப்பாணம் இலங்கை வங்கிக் கிளைகளில் கணக்கு வைத்துள்ள வாடிக்கையாளர்களின் பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்கு இலங்கை வங்கியின் பிரதிப் பொது முகாமையாளர் யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

எனவே, யாழ்ப்பாணம் இலங்கை வங்கிகளில் வர்த்தகர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்காக நாளை பிற்பகல் 4 மணிக்கு யாழ்.வணிகர்கழக பணிமனையில் கலந்துரையாடலொன்று நடைபெறவுள்ளது. இதில் இலங்கை வங்கியில் கணக்கு வைத்திருக்கும் வர்த்தகர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு வணிகர்கழகம் அறிவித்துள்ளது.

## சொற்பொழிவு

வடமராட்சி—

புலோலி ஶ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய சூழலில் அமைந்துள்ள பெரியாழ்வார் ஆசிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமைதோறும் நடைபெற்றுவரும் ஆன்மீகச் சொற்பொழிவுகள் வரிசையில் இன்று காலை 10.30 மணியளவில் 'புகழும் வீரமும் பொன்றிடாவோ' என்றும் பொருளில் ஓய்வு பெற்ற அதிபர் தா.வீரசிங்கம் சொற்பொழிவாற்றுவார். (து)

## கொக்குவில் மயானம் இன்று சிரமதானம்

கொக்குவில்—

அண்மையில் ஒழுங்கமைக்கப்பட்ட கொக்குவில் இந்து மயானத்தைப் புனரமைக்கும் நோக்கில் இன்று காலை 8.30 மணிக்கு சிரமதானப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்தச் சிரமதானத்தை நல்லூர் பிரதேச சபை செயலாளர் ஆரம்பித்து வைக்கவுள்ளதுடன் - மயான அபிவிருத்திச் சபையினர் பலரும் இணைந்து செயற்படவுள்ளனர். (90)

## கோட்டமட்ட விளையாட்டுப் போட்டி

கோப்பாய்—

கோப்பாய் கோட்ட மட்டத்திலான விளையாட்டுப் போட்டி நேற்றும், இன்றும் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் இடம்பெறுவதாக கோப்பாய் கோட்டக்கல்வி அதிகாரி தெரிவித்தார். (90)

## தையல் மனையியல் கண்காட்சி

திருநெல்வேலி—

வடக்கு - கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் அனுசரணையுடன், நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் கைவினையாளர்களின் செயற்திறனை வெளிக்கொண்டு வரும்முகமாக திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலயத்தில் தையல் மனையியல் கண்காட்சி இன்று இடம்பெறவுள்ளது. இன்று காலை 10.30 மணிக்கு ஆரம்பமாகி மாலை 4.30 மணிவரை இந்தக் கண்காட்சி இடம்பெறவுள்ளது. (90)

## புனித சூசையப்பர் திருவிழா

விசுவாசத்தின் முதுபெரும் தந்தை ஆபிரகாம் வழி மரபினராகிய தாவீது குலத்தில் பிறந்த புனித சூசையப்பர் கடவுளுக்கு பிரமாணிக்கமாக இருந்து நீதியுள்ள நடுவராக எகிப்து தேசத்தில் வாழ்ந்துவந்தார். பொறுமையின் கண்ணாடியாகவும், ஒழுக்கம், தாழ்ச்சி, பொறுமை அமைச்சல் என்னும் புண்ணியங்களில் சிறந்து விளங்கினார்.

இவரை தேவகுமாரனுக்கு வளர்ப்புத் தந்தையாகவும், கன்னியான தேவமாதாவுக்குச் சிறந்த பத்தாவாகவும் இந்த உலகில் நியமித்தார். சூசையப்பர் இந்த உலகில் வாழந்த காலங்களில பலவிதமான கஷ்டங்களை எல்லாம் அனுபவித்தார்.

அவருக்கும் இடம்பெயர்வு நடைபெற்றது. ஏரோதன் காலத்தில் தேவகுமாரனை காப்பாற்ற எகிப்துக்கு ஓடிப்போனார். மகனைக் காணாமல் மூன்று நாள் அலைந்து திரிந்தார்கள். ஜெருசலேம் தேவாலயத்தில் சிமியோன் சொன்னதை தாய் மரியாள் தன் மனதில் வைத்திருந்தாலும், சூசை யப்பரும் துன்பப்பட்டிப்பார்.

துன்பம் அன்றும், இன்றும் உள்ளது. சூசையப்பர் எகிப்தில் இருந்து நசரேத்துக்கும் தாயையும், மகனையும் கூட்டி அங்கே போய் வாழலாம் என் நினைத்தபோது எகிப்து தேசத்தில் இருந்த அர்க்கலாவுஸ் என்னும் கொடிய மன்னன் அவரைத் துன்பத்தில் ஆழ்த்தினான். இப்படிப்பட்ட துன்பங்களைக் கண்டு அவர் பின்வாங்கவில்லை.

சூசையப்பர் 27 வருடம் தேவமாதாவோடு வாழ்ந்தார். 60 வயதில் அவர் யேசுவும், தாயும் இவ்வுலகில் இருந்தபோது அவர் மடியில் பாக்கியமான மரணத்தை அடைந்தார். இறைவன் அவரைத் திருச்சபைக்கு பாதுகாவலராகவும், மோட்ச வீட்டின் எஜமானராகவும் நியமித்தார். அவருக்கு பங்குனி 19 ஆம் திகதி பெருவிழாவாக உலகம் எங்கும் கொண்டாடப்பட்டுவருகிறது.

எனவே, கொழும்புத்துறையிலும் அவருடைய நாமம் கொண்ட திருத்தலம் இருக்கிறது. அந்த ஆலய விழாவும் இன்று விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. சூசையப்பர் திருத்தலம் வரலாற்றுப் புகழ்பெற்ற ஆலயம். மேலைத் தேசத்துக் குருக்கள் யாழ்.மேற்றாசனத்தை நிர்வகித்த காலத்தில் கட்டப்பட்டது.

இந்த ஆலயலத்தின் அருகில் இருந்த பாடசாலை 1958 ஆம் ஆண்டுக்குமுன் பிரபல்யமாய் விளங்கியது. வடமாகாணத்தில் பல இடங்களிலிருந்தும் மாணவர்கள் தரித்திருந்து கல்வி கற்றுவந்தனர்.. அந்தக் கால கட்டத்தில் இங்குதான் ஆசிரிய கலாசாலை, ஆண்கள், பெண்கள் கல்வி பயின்ற இடம். இந்தக் கோவில் வளாகம் பெரிய தென்னந்தோட்டமாக இருந்தது. அந்த நாள் தொடக்கம் முதியோர் இல்லம் இன்று வரைக்கும் இருந்து வருகிறது.

1958 ஆம் ஆண்டின்பின் அப்போது இருந்த அரசாங்கம் பாடசாலைகளை பொறுப்பேற்றது. இந்தப் பாடசாலை வீழ்ச்சியுற்றது. அந்த நேரத்தில் எமது மறைமாவட்ட ஆயர் எமிலியானுஸ்ப்பிள்ளை ஆயராக இருந்த காலகட்டம். அவருடைய புத்திசாதுரியத்தால் கலாசாலை நடைபெற்ற மண்டபமும், காணிகளும் காப்பாற்றப்பட்டன.

தற்போது சூசையப்பரின் அருளால் குருக்களை உருவாக்கும உயர் கல்விக் கூடமாக மாறி மிளிருகிறது. சூசையப்பரை அண்டி அவருடைய பரிந்துரையால் தொழிலாளர், கல்விமான்கள், புத்திஜீவிகள் காப்பாற்றப் படுவார்கள். அவர் எப்போது எங்களுக்காகப் பரிந்துரைப்பார்.

அருளப்பு - கொர்னேலியஸ்

# யாழ்.மாநகர சபை

## வீதி வேலைக்கான கேள்வி அறிவித்தல்

கீழ் குறிப்பிட்ட வீதிவேலைக்காக யாழ.மாநகரசபையில் பதிவுசெய்துள்ள இக்ராப்பதிவுடன் கூடிய இலங்கை தேசிய நிர்மாண சங்கத்தில் செல்லுபடியாகும் உறுப்புரிமையுடைய ஒப்பந்தகாரரிடமிருந்து கேள்விகள் 'கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும் கடைசித் திகதி:- 24.03.2006 நண்பகல் 12.00 மணிவரை
கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி:- 27.03.2006 நண்பகல் 12.00 மணிவரை
கேள்விகள் திறக்கப்படும் திகதி :- 27.03.2006 பி.ப 3.00 மணிவரை

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப் பத்திரங்கள் அரக்கு முத்திரை இடப்பட்ட கடித உறையிலிட்டு, கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வீதிப் பெயருடன் 'வீதி செப்பனிடுவதற்கான கேள்வி' என எழுதி மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம் என முகவரியிட்டு, பதிவுத்தபால் மூலமோ அல்லது இதற்கென ஆணையாளர் பணிமனையில் வைக்கப்பட்ட கேள்விப் பெட்டியிலோ நேரடியாகச் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் இந்து விடுதியில் செயற்பட்டுவரும் வீதி வேலைப்பகுதியில் அறிந்துகொள்ள முடியும்.

| தொ.இல | வேலையின் பெயரும் அமைவிடமும் | ஆகக் குறைந்த இக்ராட் பதிவுத்தரம் | மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப் பணம் (ரூபா) | மீளளிக்க முடியாத கேள்வி வைப்புக் கட்டணம் வற் வரி உட்பட (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | தலையாழி ஒழுங்கை, கொக்குவில. | M9 | 3750.00 | 1250.00 |
| 02 | கோணாந்தோட்ட வீதி, கொட்டடி. | M8 | 10000.00 | 1500.00 |
| 03 | கன்னார் வீதி, நாயன்மார்கட்டு. | | 2500.00 | 1000.00 |
| 04 | கனகரத்தினம் மகா வித்தியாலய ஒழுங்கை, அரியாலை. | M9 | 3000.00 | 1250.00 |
| 05 | கச்சேரி ஒழுங்கை, அரியாலை. | M9 | 2500.00 | 1000.00 |
| 06 | பருத்தித்துறை வீதி, சங்கிலியன் வீதி, இணைப்பு ஒழுங்கை, நல்லூர். | M9 | 4500.00 | 1500.00 |
| 07 | நொத்தாரிஸ் ஒழுங்கை, அரியாலை. | M8 | 10000.00 | 1500.00 |
| 08 | கச்சேரி கிழக்கு ஒழுங்கையின் உப ஒழுங்கை, அரியாலை. | M9 | 2500.00 | 1000.00 |
| 09 | பென்ரிக்கோஸ் சபை ஒழுங்கை, அரியாலை. (1 பகுதி) (பிரப்பம்குளம் ஆ.வ.வீதி இணைப்பு) கொழும்புத்துறை. | M9 | 2500.00 | 1000.00 |
| 10 | நாகராசா வீதி, உப ஒழுங்கை, பாண்டியன் தாழ்வு. | M9 | 1500.00 | 575.00 |
| 11 | (கோவில் வீதி, உப ஒழுங்கை) நெல்லி ஒழுங்கை, நல்லூர். | M9 | 1000.00 | 575.00 |
| 12 | (கோவில் வீதி, உப ஒழுங்கை) கந்தன் கருணை ஒழுங்கை, நல்லூர். | M9 | 2250.00 | 800.00 |
| 13 | துரைராசா வீதி, வண்ணார்பண்ணை. | M9 | 3500.00 | 1150.00 |
| 14 | நாவலடி ஒழுங்கை, வண்ணார்பண்ணை. | M9 | 5250.00 | 1725.00 |
| 15 | மூத்ததம்பி அவனியூ, நல்லூர் | M9 | 3500.00 | 1150.00 |
| 16 | ஆசீர்வாதம் ஒழுங்கை, யாழ்.நகர். | M9 | 3250.00 | 1150.00 |
| 17 | மூளாய் ஒழுங்கை, யாழ்.நகர். | M9 | 2500.00 | 800.00 |

குறிப்பு : 1. கேள்விகள் திறந்து பரிசீலிக்கும்போது தாங்களோ அல்லது தங்கள் பிரதிநிதி ஒருவரோ கேள்விச் சபைக்கு சமுகங்கொடுக்க அனுமதிக்கப்படும்.

2. வேலைகள் யாவும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட தினத்திலிருந்து 2 மாதங்களுள் நிறைவுறுத்தி ஒப்படைக்கவேண்டும்.

சீ.வீ.கே.சிவஞானம்
மாநகர ஆணையாளர்,
மாநகர சபை.

(சி-5162)


பொன்னரசி நகையகம்
Bonnatasy Nakaijagam

வன்னி மண்ணில் 6 வருட சேவையின் பின்
யாழ் மண்ணில் 4 ஆவது அகவையில்
காலடி பதிக்கின்றோம்.
எமது வாடிக்கையாளர்கள்,
அன்பர்கள் அனைவருக்கும் எமது
உளம் கனிந்த நல்வாழ்த்துக்களை
தெரிவித்துக்கொள்கின்றோம்.

பொன்னரசி நகையகம்
T.P : 021 - 222 7648
0777 - 066427
76A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
76A, Kasthuriyar Road, Jaffna.
[5153]

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# மட்டக்களப்பில் மூவர் கடத்தல்; கண்காணிப்புக்குழுவில் புகார்!

மட்டக்களப்பு—

மட்டக்களப்பில் துணை ஆயுதக் குழுவினரால் பொதுமக்கள் மூவர் கடத்தப்பட்டுள்ளதாக கண்காணிப்புக்குழுவிடம் விடுதலைப் புலிகளின் புளியந்தீவு கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் அன்புமாறன் முறைப்பாடு செய்துள்ளார்.

மட்டக்களப்பு நகரில் அண்மைக் காலமாக இராணுவத்தினராலும் அவர்களோடு சேர்ந்தியங்கும் துணை ஆயுதக் குழுக்களாலும் எமது ஆதரவாளர்களும், அப்பாவிப் பொதுமக்களும் பலவகையான துன்புறுத்தல்களுக்கும், நெருக்கடிகளுக்கும் ஆளாகி வருகின்றனர்.

கடந்த 17 ஆம் திகதி மட்டக்களப்பு - கல்லடியில் பரமேஸ்வரநாதன், காந்தசீலன் (குட்டி), கரன் ஆகிய மூவரும் இராணுவ புலனாய்வுப் பிரிவினராலும், அவர்களோடு சேர்ந்தியங்குகின்ற துணை ஆயுதக் குழுவினராலும் இரவு 8 மணியளவில் கடத்திச் செல்லப்பட்டனர்.

இவர்களில் பரமேஸ்வரநாதன் என்பவர் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவில் இணைப்பாளராகவும், இலங்கை செஞ்சிலுவைச் சங்க உறுப்பினராகவும் கடமையாற்றுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

அவர் கல்லடியில் வசித்து வருபவர். அவரது வீட்டுக்கு நள்ளிரவு 1.30 மணியளவில் வெள்ளைநிற டொல்பின் ரக வாகனத்தில் வந்த ஆயுததாரிகள் சுமார் ஒரு மணி நேரம்வரை அவரது வீட்டில் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர்.

இதேபோன்று ஏனைய இருவரது வீட்டிலும் சோதனை நடவடிக்கை மேற்கொண்டனர். அவர்கள் இருவரும் கூலித்தொழில் செய்து வருபவர்கள்.

இத்தகைய சம்பவங்கள் அண்மைக்காலமாக மட்டக்களப்பு நகரில் அதிகரித்திருக்கின்றன.

அண்மையில் இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஜெனிவாவில் மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தை உடன்படிக்கையின்படி - துணை ஆயுதக்குழுக்களின் ஆயுதங்கள் களையப்பட வேண்டும் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டபோதும், மட்டக்களப்பு நகரில் பேச்சுவார்த்தையின் பின்னர் அந்தக் குழுக்களின் செயற்பாடுகள் அதிகரித்திருக்கின்றமையை இது எடுத்துக் காட்டுகின்றது.

விரைவில் நடைபெறவுள்ள அடுத்தகட்டப் பேச்சுவார்த்தையை இந்தச் சம்பவங்கள் பாதிக்கும் என்பதோடு, இது ஒரு அப்பட்டமான யுத்த நிறுத்த மீறல் என்பதையும் தங்களது கவனத்துக்கு தருகின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சிறைச்சாலையை படம்பிடித்த செய்தியாளர் தடுத்து வைப்பு!

யாழ்ப்பாணம்—

யாழ்.சிறைச்சாலையை படம் பிடித்த யாழ். தினக்குரல் செய்தியாளர் படையினரால் கைதுசெய்யப்பட்டு ஒரு மணி நேரம் தடுத்துவைக்கப்பட்டு விசாரணையின் பின்னர் விடுதலை செய்யப்பட்டார்.

நேற்றுமாலை 4.30மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

தினக்குரல் செய்தியாளர் ஒருவர் யாழ். சிறைச்சாலையின் முகப்புத் தோற்றத்தை புகைப்படம் எடுக்க முற்பட்ட வேளை சிறைச்சாலைக்கு சமீபமாக இருந்த காவலரணில் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் பிரஸ்தாப செய்தியாளரை கைதுசெய்தனர்.

தான் ஒரு ஊடகவியலாளர் என்பதை அடையாள அட்டையை காண்பித்து உறுதிப்படுத்திய போதிலும், குருநகர் சந்தி இராணுவ முகாமுக்கு அழைத்துச்சென்று ஒரு மணி நேரத்துக்கு மேலாக தடுத்துநிறுத்தி விசாரணைக்குட்படுத்தியதுடன் மிரட்டியுள்ளனர்.

சிறைச்சாலையை படம் பிடிப்பதற்கு தங்களிடம் அனுமதி பெற வேண்டும் எனத் தெரிவித்ததுடன், சிறைச்சாலையைப் படம் பிடிப்பதற்கு ஒருபோதும் அனுமதிக்கமுடியாது எனவும் விசாரணையின்போது இராணுவத்தினர் தெரிவித்ததாகத் தெரியவருகிறது.

(த,வ)

## நாட்டுப்பற்றாளர் நாள் எழுச்சியுடன் அனுஷ்டிப்பு

கிளிநொச்சி—

இந்திய அரசின் நயவஞ்சகத்தை எதிர்த்து உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்த தியாகதீபம் அன்னை பூபதியின் 18 ஆம் ஆண்டு நினைவு நாள் மற்றும் நாட்டுப்பற்றாளர் நாள் இன்று தமிழர் தாயகத்திலும், ஈழத் தமிழர் புலம் பெயர்ந்து வாழும் நாடுகளிலும் எழுச்சியுடன் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வையொட்டி காலை 9 மணிக்கு பொதுச்சுடர், தமிழீழத் தேசியக்கொடி ஆகியன ஏற்றப்படும்.

பின்னர் அன்னை பூபதி மற்றும் நாட்டுப்பாளர்களின் உருவப்படத்துக்குச் சுடரேற்றி, மாலைஅணிவித்து, மலர்தூவி, அகவணக்கம் செலுத்தப்படும். ஏப்ரல் 19 ஆம் திகதி வரை இந்த நிகழ்வுகள் பிரதேச ரீதியாக நடைபெறவுள்ளது.

17, 18, 19 ஆம் திகதிகளில், காலை 9 மணிமுதல் அடையாள உண்ணாவிரத நிகழ்வு பிரதேச ரீதியாக நடைபெறவுள்ளது.

## அரிசி, கோதுமை இறக்குமதி வரி 10 ரூபாவால் அதிகரிப்பு!

கொழும்பு—

அரிசி மற்றும் கோதுமை மா ஆகியவற்றின் இறக்குமதி வரியை கிலோ ஒன்றுக்கு 10 ரூபாவால் அதிகரிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதனால் கோதுமை மாவின் விலை பெருமளவில் உயர்வடைவதுடன் இறக்குமதி வரி விலையும் உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

உள்ளூர் விவசாயிகளின் நன்மை கருதி இறக்குமதி அரிசிக்கு கிலோ ஒன்றுக்கு 10 ரூபா வரி அதிகரிப்பு மேற்கொள்ள அரசு தீர்மானித்துள்ளது.

இதன்படி தற்போது ரூ 9.90 ஆக உள்ள இறக்குமதி வரி 20 ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளது.

அதேவேளை, உள்ளூர் அரிசியின் கேள்வியை அதிகரிக்காது, கோதுமை மாவின் பாவனையைக் குறைக்கும் நோக்குடன் - கோதுமை மாவுக்கும் கிலோ ஒன்றுக்கு 10 ரூபா இறக்குமதி வரி விதிக்கப்படவுள்ளது.

தற்போது பெரும்போக அறுவடை முடிவுற்றதால் - 2 மில்லியன் மெட்றிக் தொன் அரிசி கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சம்பா நெல் ஒரு கிலோ ரூ 17.50 படியும், நாடு நெல் ஒரு கிலோ ரூ 16.50 படியும் அரசு விலை நிர்ணயித்துள்ளபோதும் தனியார் குறைந்த விலைக்கே கொள்வனவு செய்துவருவது குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் பெரும்போக நெற்செய்கை 5 லட்சத்து 60 ஆயிரம் ஹெக்ரெயரிலும், சிறுபோகம் 3 லட்சத்து 10 ஆயிரம் ஹெக்ரெயரிலும் செய்கை பண்ணப்படுவது குறிப்பிடத்தக்கது.

### கைதடிப் பெண்...

அவ்விடத்திலேயே உடல் சிதறிப் பலியானதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கைதடியைச் சேர்ந்த சறோஜா தேவி விஜயசிங்கம் (வயது 46) என்ற 3 பிள்ளைகளின் தாயாரே உயிரிழந்தவராவார்.

இவரது மரணம் விபத்தா அல்லது தற் கொலையா என்பது குறித்து டுசில் டோம் நகரப் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

### புதிய தூதுவர்...

நியமிக்கப்பட்ட பின்னர் நேற்று ரி.ரி.என் தொலைக்காட்சிக்கு பேட்டியளித்த அவர் -

இலங்கையின் சமாதான முயற்சிகளை ஏனைய நாடுகளின் முயற்சிகளுடன் ஒப்பிட முடியாது. இது தனித்துவமான அம்சங்களை உள்ளடக்கியது. அவற்றைக் கவனத்தில் கொண்டே இந்த முயற்சியில் ஈடுபடவேண்டும்.

பலஸ்தீன அமைதி முயற்சியிலுள்ள நீண்ட அனுபவம் இலங்கையின் அமைதி முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதற்கு உதவுமா என்று வினவியதற்கு ஜோன் ஹன்சன் பௌயர் -

பலஸ்தீனத்தில் மட்டுமல்லாது - வேறும் பல நாடுகளில் அமைதி முயற்சிகளில் பங்கெடுத்துக்கொண்ட எனது நீண்ட அனுபவம் இலங்கையின் சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதற்கு உதவும்.

ஆனால், ஏனைய நாடுகளின் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் கிடைத்த அனுபவங்களை இலங்கையின் சமாதான முயற்சிகளில் அப்படியே பிரயோகிக்க முடியாது. இலங்கையின் தனித்துவமான பிரச்சினைகளை கவனத்தில் கொண்டே இந்த முயற்சியை முன்னெடுத்துச் செல்ல தாம் விரும்பவதாகவும் தெரிவித்தார்.

இலங்கையின் சமாதான முயற்சிகள் வெற்றியளிக்கும் என்ற நம்பிக்கை உங்களுக்கு உள்ளதா என்று வினவியதற்கு - அதற்கான முயற்சியில் தாங்கள் ஈடுபடவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை, எரிக் சொல்ஹெய்மே இலங்கை சமாதான முயற்சிகளுக்கான முழுப்பொறுப்பையும் வகிப்பார் என்றும், இவர் முன்னர் நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சன் வகித்த பொறுப்பில் இருப்பார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை, முன்னர் சொல்ஹெய்ம் வகித்த இடத்துக்கே ஜோன் ஹன்சன் பௌயர் நியமிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## வேட்பாளர் வீடு மீது கிரனேற் தாக்குதல்

மட்டக்களப்பு—

மட்டக்களப்பு - வாழைச்சேனையில் உள்ளூராட்சி சபைத்தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவரின் வீட்டின் மீது நேற்று அதிகாலை 4.30 மணியளவில் கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

கைக்குண்டுத் தாக்குதலுக்கு இலக்கான வீடு பலத்த சேதத்துக்குள்ளாகியது.

இந்த வீட்டின் உரிமையாளர் இந்தமுறை உள்ளூராட்சி சபைத் தேர்தலில் சுயேட்சையாக போட்டியிடுகிறார்.

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை என்றும், இந்தத் தாக்குதலில் யாருக்கும் எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை என்றும் வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

## பிறிமா ஊழியர்கள் உண்ணாவிரதம் கோதுமை மா விநியோகம் பாதிப்பு!

திருகோணமலை—

திருகோணமலை பிறிமா நிறுவன தொழிற்சங்கங்களின் ஊழியர்கள் நேற்று முதல் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

4 அம்சக்கோரிக்கையை முன்வைத்து இந்த சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த உண்ணாவிரதப் போராட்டம் காரணமாக கோதுமை மா விநியோக நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

### ஆயுதக்குழுவின்...

மட்டக்களப்பு - காத்தான்குடி தமிழ், முஸ்லிம் பிரதேசங்களில் பெருமளவான இராணுவத்தினர் குவிக்கப்பட்டிருந்தனர்.

இந்த முழு அடைப்புப் போராட்டத்தில் 3 அரசாங்க பஸ் சேதப்படுத்தப்பட்டன. அனைத்து போக்குவரத்து சேவைகள் இரத்துச் செய்யப்பட்டு வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்தன.

SPOKEN ENGLISH
WITH
GRAMMAR
LECTURES BY:
MR.M.A.HARI
தொழில் புரிவோருக்கு புதிய பிரிவு
ஆரம்பம்
21.03.2006 செவ்வாய்க்கிழமை
இரவு 7.00 மணி
Tuesday
Thursday } 7.00 P.M - 8.00 P.M
HARY'S INSTITUTE
இல.564, கஸ்தூரியார் வீதி,
(யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை அருகில்)
யாழ்ப்பாணம்.

## சொல்ஹெய்ம் விலகுவது பின்னடைவை ஏற்படுத்தும்

### ஐ.தே.க கருத்து

கொழும்பு—

இலங்கையின் சமாதான முயற்சிகளில் இருந்து எரிக் சொல்ஹெய்ம் ஒதுங்கிக்கொள்ள முற்படுவது சமாதான முன்னெடுப்புக்களில் குழப்பத்தை ஏற்படுத்தும் என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

இலங்கையின் சமாதான முயற்சிகளில் இருந்து எரிக் சொல்ஹெய்ம் ஒதுங்கிக்கொள்வதாக வெளியான செய்திகள் குறித்து ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதி பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கருத்து வெளியிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையின் சமாதான முயற்சிகளில் நீண்டகால அனுபவம் கொண்டவர் என்ற வகையில் எரிக் சொல்ஹெய்மின் விலகலானது சமாதான முயற்சிகளை தாமதப்படுத்தும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, எரிக் சொல்ஹெய்மின் விலகல் குறித்து ஜே.வி.பி மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகள் மகிழ்ச்சி வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (01)

## எட்டு ஈழத்தமிழர்கள் தங்கச்சிமடம் சென்றனர்

சென்னை—

யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் இருந்து எட்டு ஈழத்தமிழ் அகதிகள் கடந்த வியாழக்கிழமை தமிழ் நாட்டின் கரையோரப்பகுதியான தங்கச்சி மடத்தைச் சென்றடைந்தனர்.

இவர்கள் பேசாலையிலிருந்து மீன்பிடிப்படகு ஒன்றில் புதன்கிழமை இரவு தமிழ்நாடு நோக்கி பயணித்ததாகத் தெரியவருகிறது.

இவர்களில் 6 பெண்களும், 2 குழந்தைகளும் அடங்குகின்றனர். இவர்களை விசாரணைக்கு உட்படுத்திய தமிழக பொலிஸார் பின்னர் மண்டப முகாமில் தங்கவைத்துள்ளனர்.

## தமிழக கடலில் வைத்து 6 ஈழத்தமிழர் கைது!

சென்னை—

சந்தேகத்துக்கிடமான முறையில் தமிழ்நாடு கரையோரப்பகுதியை நோக்கிச்சென்ற படகினை சுற்றி வளைத்த தமிழக கரையோரப் பொலிஸார் படகிலிருந்த 6 பேரை கைது செய்தனர்.

படகிலிருந்த மேலும் ஒருவர் கடலில் குதித்து தப்பிச்சென்றுவிட்டார்.

கடந்த வியாழக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றது. இந்தப்படகில் பயணம் செய்தவர்களில் 2 ஆண்களும், 2 பெண்களும், 2 குழந்தைகளும் அடங்குவர்.

தமிழக பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இவர்கள் மண்டப முகாமுக்கு அனுப்பப்பட்டனர். இவர்கள் பயணம்செய்த படகு பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

### வட - கிழக்கு...

இதேவேளை, விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்தாது ஒத்திவைக்குமாறு பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தேர்தல் ஆணையாளரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்காவுக்கு கூட்டுப்படைத்தளபதி தயா சந்தகிரியூடாக கடிதம் ஒன்றை சந்திரா பெர்னாண்டோ அனுப்பியுள்ளார்.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் கொத்தணி வாக்குச்சாவடிகளை அமைத்தது போன்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படாத நிலையில் - விடுதலைப் புலிகளின் பிரதேசத்தில் தேர்தல் நடத்தப்பட்டால் தங்களால் பாதுகாப்பு வழங்கமுடியாது என்றும் அந்தக்கடிதத்தில் சந்திரா பெர்னாண்டோ கூறியுள்ளார்.

### உள்ளூராட்சி....

கலந்துகொண்டு கருத்துரைகளை வழங்கினார்.

இதேவேளை, நேற்றுப்பிற்பகல் 3.30 மணியளவில் வலி.வடக்கு, வலி.கிழக்கு பிரதேச வேட்பாளர்களுடனான சந்திப்பு யாழ்ப்பாணம் மார்டின் வீதியிலுள்ள தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, எம்.கே. சிவாஜிலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டு கருத்துரைகளை வழங்கினர்.

இதேவேளை, நேற்றுமுன்தினம் ஊர்காவற்துறைப் பிரதேச வேட்பாளர்களுடனான சந்திப்பும் நடைபெற்றது. (கு)

### நெல்...

ஜெனிவா பேச்சுவார்த்தை தொடங்கவிருந்த பெப்ரவரி 22 ஆம் திகதிக்கு முன் இராணுவ அதியுயர் பாதுகாப்பு பகுதிகளாகிய வெலிக்கந்த பகுதியிலும், மட்டக்களப்பு மாவட்டத்தின் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் பல பிரதேசங்களில் பலர் கடத்தப்பட்டும், சுட்டுக் கொல்லப்பட்டும் உள்ளனர்.

இத்தகைய செயற்பாடுகள் நாளுக்கு நாள் மிகத்தீவிரமாக கருணா குழுவினராலும் இராணுவம் மற்றும் புலனாய்வுத்துறையினராலும் அரங்கேற்றப்பட்டு வருகின்றன.

இந்த நடவடிக்கைகளால் மக்கள் மத்தியில் பீதி ஏற்பட்டு இந்தச் சூழ்நிலையில் என்ன செய்வதென்று அறியாமல் நிலைகுலைந்துள்ளனர்.

போர்நிறுத்த ஒப்பந்தத்தை பாதிப்புக்குள்ளாக்கியுள்ள இவ்வகையான நடவடிக்கைகள் - மீண்டும் எமது தாயகப் பகுதியில் ஒரு யுத்தசூழலை உருவாக்கும் நிலையைத் தோற்றுவிக்கும்.

அத்துடன், இது தமிழ்மக்களுக்கு எதிரான பாரிய போர்நிறுத்த மீறலாகும். இந்தச் சம்பவத்தை நாம் கண்டிக்கிறோம் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட போர்நிறுத்த கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 19.03.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.